திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

மலர் : 8 25-2-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா இதழ் : 29

பம்பாய் திருவள்ளுவர் கலா மன்ற நிதிக்காக—மன்றத்தார் அளிக்கும் மகத்தான கலை விருந்து!

பலிபீடம் நோக்கி

கதை வசனம் :
நெல்லை. இரா. இளம்வழுதி
பாடல்கள் : சுப. குமார்

9-3-55 மாலை 7-30

பம்பாய் தாராவி
வ. உ. சி. திடலில்

கட்டணம் : ரூ. 1-5-0, 0-10-6

'நேரு லீலா'

மும்மூர்த்திகள் எனபோற்றப்படுப வர்களில் ஒருவராகிய விஷ்ணு, எடுத்த அவதாரங்களில் கிருஷ்ணவதாரமே மிகவும் சிறந்தது என வைதீகர்கள் கூறு வார்கள். ஏன் புராணக் கதைகளே அப்படித்தான் சித்தரிக்கின்றன. மகா விஷ்ணு, கண்ணன் அவதார மெடுத்து மண்ணைத் தின்றார்! வெண்ணைத் திருடினார்! மாதர்களிடத்தில் மத்தால் அடிபட்டார்! பின்னர் சேலையைத் திருடினார்! மரத்தில் ஏறினார்! மாதர்தம் குலத்தையே இழிவுபடுத்தினார்...... என்று ஆரம்பித்து அவரின் மைனர் விளையாட்டுகளை யெல்லாம் எடுத்துக்காட்டுகிறது புராணங்கள்!

*

ஒரு நாள்—ஆயர்குல கற்புக்கரசிகள் தங்களின் சேலைகளை அவிழ்த்து குளத் தங்கரையிலே வைத்துவிட்டு குளித்துக் கொண்டிருந்தார்களாம்! அந்த சமயத்தில் மண்ணைத் தின்ற மகாபெரிய கடவுளாகிய கிருஷ்ணன் அங்கு சென்று சேலைகளைத் திருடிக்கொண்டு அருகிலிருந்த மரத்தின் மீது ஏறிக்கொண்டாராம்! இப்படித் தாவிக் குதித்த அந்தக் கடவுள் சும்மா யிருக்கவில்லை புல்லாங் குழலை எடுத்து ஊதுஊதென்று ஊதினாராம்! குளித்துக் கொண்டிருந்த தாய்மார்கள் திடுக்கிட்டு தங்களின் உடலை ,தண்ணீருக்குள் மறைத்துக் கொண்டு திரும்பிப் பார்க்க—தங்களின் சேலைகளை திருடி வைத்துக்கொண்டு கிருஷ்ணன் நையாண்டி செய்வதைக் கண்டு மனவேதனை யடைந்தனராம்! அந்த கிருஷ்ணனின் திருட்டுச் செயலையும் பண்பற்ற முறையையும் கண்டித்தார்களாம்...இப்படியாக புராணம் கூறுகிறது!

*

ஆவடி காங்கிரசிலே "சோஷலிஸம் மாதிரி" பொருளாதார அமைப்பு என்று நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், வெறும் கண்துடைப்பு, ஏமாற்றுத்தனம் என்று திராவிட முன்னேற்றக் கழகமும் ... அந்தத்தீர்மான மானது சோஷலிஸ்ட்டு கட்சியின் கொள்கையை காங்கிரஸ் திருடிக் கொண்டதோடல்லாமல் அக்கொள்கையின் உயர்தன்மையையே சீர்குலையச் செய்யும் பித்தலாட்டமாகும் என்று பிரஜா—சோஷலிஸ்ட் தலைவர் ஆச்சார்யா கிருபளானியும் கூறிவருவதை அனைவரும் அறிந்திருப்பார்கள் என்றே நம்புகிறோம்.

இவ்வாறு மாற்றுக் கட்சிகள் கூறும் போது தேசியத் தோழர்களுக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. தி. மு. கழகத்தையும் பிறகட்சிகளையும் கண்டவாறு தூற்றுகின்றனர். ஆஹா எங்கள் நேருவா 'சோஷலிஸம்' என்பதைத் திருடிக்கொண்டார். அப்படி கூறுபவர்களை விட்டோமா பாருங்கள் என்று துள்ளிக்குதிக்கின்றனர்! அந்தத் தேசிய மெய்யன்பர்களுக்கு — ஆவடி காங்கிரஸ் தீர்மானததின் அற்புதமே அற்புதம் என்று ஆலாபனை செய்யும் தேசியத் தோழர்களுக்கு—இதோ மற்றொரு எடுத்துக்காட்டை அர்ப்பணிக்கிறோம்.

அதிலும் இந்த எடுத்துக்காட்டு தி. மு: கழகமோ மற்ற கட்சிகளோ கூறுவதல்ல, தேசீய ஏடுகளில் முதன்மை வாய்ந்ததும் காங்கிரஸ் 'பக்தி'யில் பழுத்ததுமான 'சுதேசமித்திரன்' தனது 16—2—55 வெளியீட்டில் 'சோஷலிஸம் மாதிரி' என்ற தீர்மானத்தின் லட்சணத்தை அதுவும் ஓவியத்தின் மூலம் அம்பலப்படுத்தி யிருப்பதை தென்னாட்டு தேசியத் தோழர்கள் கூர்ந்து கவனித்து சிந்திக்க வேண்டுகிறோம்.

சுதேசமித்திரன்—16—2—55

அந்தக் காலத்துக் கடவுள் கற்புக் கரசிகளின் சேலைகளைத் திருடினான்!

இந்தக் காலத்து ஆசியாவின் ஜோதியின் ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ், பிறகட்சிகளின் தீர்மானத்தைத் திருடுகிறது!—இவ்வாறு நாம் கூறுவதாக காங்கிரஸ் தோழர்கள் ஆத்திரப்படக் கூடாது. பழுத்த காங்கிரஸ் ஏடு சு. மி. யின் சித்திரத்தைப் பார்த்து தேசியத் தோழர்களே முடிவு கூறட்டும்!

"கடவுள், கண்ணியமிழந்து கூத்தடித்தது அந்தக் காலம்—காங்கிரஸ் கொள்கையைத் திருடி கும்மாளமடிப் [பது இந்தக்காலம்''

என்று பத்ம விபூஷண கோகிலங்கள் பாடவும் செய்வரோ அறியோம்!

ஆவடி காங்கிரசின் 'சோஷலிஸம் மாதிரி'' தீர்மானத்தின் தன்மையை தேசிய ஏடு 'மித்திரன்' எடுத்துக்காட்டியதைவிட நாம் அதிகம் விவரிக்க வேண்டியதில்லை யல்லவா! ஆகவே ஆவடி காங்கிரசும் அதன் முக்கிய தீர்மானமும் ''நேரு லீலா''க்களில் ஒன்று என்று நாம் கூறின் தவறில்லையே! திராவிட தேசியத் தோழர்களே சிந்தியுங்கள்.

ஏக இந்தியா என்ற பேரால் நமது தென்னாடு எந்த அளவுக்கு சீரழிக்கப்பட்டு வருகிறதென்பதையும் அதை மறைக்க காங்கிரஸ் மேலிடத்தார் என்னென்ன திருவிளையாடல்களைப் புரிந்து நமது மக்களின் அரசியல் எழுச்சியைப் புறக்கணித்து வருகிறார்கள் என்பதையும் காங்கிரஸ் தோழர்கள் உணருதல் வேண்டாமா?

உறங்கிக் கிடந்த சின்னஞ் சிறு நாடுகளெல்லாம் எழுந்து உட்கார்ந்து அகில உலக அரசியல் விவகாரங்களிலே தலை நிமிர்ந்து பேசுகின்றன!

ஆனால் நமது திராவிடமோ வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கண் துடைப்புவித்தைகளில், ஏமாந்து மொழிப் பற்று, நாட்டுப் பற்று அற்றவர்களாய்இருப்பதா? தேசியத் தோழர்களே பதில் கூறுங்கள். 'நேரு லீலா'க்களிலே மேலும் ஏமாறப் போகிறீர்களா? அல்லது திராவிடத்தை மீட்கும் பணிக்கு உங்கள் ஆதரவை அளிப்பீர்களா?

—என்வியென்.

கர்னாடக திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

தொண்டர்படைத் தலைவர்
தோழர். ஆர். ராகவன்

மாநாட்டின் முகப்புக் காட்சி
மஜீத் பந்தல்—கலாயம் அரங்கு

அரசியல் மாநாட்டுத் தலைவர் கழகக் கொடியை ஏற்றிவைக்கும் காட்சி.

தெய்வ வழிபாடும் திருவள்ளுவரும்!

●

தெய்வ வழிபாட்டின் பேரால் கண் மூடிப்பழக்க வழக்கங்களை நாட்டிலே வளர்த்து வந்த வஞ்சகத்தன்மையைப்பற்றி அறிவியக்கத்தார் கண்டித்தால் ஆஸ்திகர்கள் என்று கூறிக் கொள்பவர்களுக்கு ஆத்திரம் மேலிடுகிறது! அவர்கள் சற்று அமைதியோடு சிந்தித்தால் தெளிவு பெறக்கூடும் எனக்கருதியே இக்கட்டுரையை வரையலானேன்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தெய்வங்கள் பற்றிய கதைகள் பல உண்டு இந்திரன், முருகன், சிவன், எமன், இலக்குமி,நான்முகன் போன்ற கற்பனைக் கடவுள்களும் உண்டு. 'அங்கண் உலகின் அருந்ததி' என்று சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலிலும் (63) ஆறுமுக ஒருவனோர் பெறுமுறை யின்றியும்' (49) என்று மனையறம் படுத்த காதையில் வருவதாலும் அருந்ததி ஆறுமுகம் தோன்றிய கதைகளும் ஏற்பட்டு விட்டன. சந்திரனை பாம்பு பிடிப்பதால் சந்திர கிரஹணம் தோன்றுவதாக அந்தக் காலத்திலும் நம்பியிருக்கின்றனர். 'திங்களைப் பாம்பு கொண்டற்று' (குறள் 1146).

சிறுதினை மலரொடு விரை இ மறியறுத்து' என்று திரு முருகாற்றுப் படையில் ஆடு வெட்டுதல் கூறியிருப்பதாலும் இக்காலத்தில் இருக்கும் வழக்கமெல்லாம் அந்நாளிலும் உண்டு.

புதரில் மறைந்து கொண்டு பறவைகளைப் பிடிக்கும் வேடனைப் போல போலித் தவக்கோலம் போட்டுக்கொண்டு தீயசெயல் புரிபவர்களை நம்பாதீர்கள், (குறள் (274)

வாழ்க்கையில் பற்றற்றோம் என்பார்கள் பற்று நிறைந்தவர்கள் (275), தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை யடித்தல், சடை வளர்த்தலாகிய புறக்கோலம் எதற்கு?(280). எனவேதான் உண்மையான நல்ல செயல் வேண்டுமென்கிறார். மனிதனை தன்னம்பிக்கை யற்றவனுக்கியதுடன் தெய்வங்களைக் காட்டி அச்சுறுத்தினார்கள் ஒரு சில கூட்டத்தார்கள். அவர்கள் தெய்வத்தால்தான் எல்லாம் ஆகும் என்று கூறி மனிதனை தன்னம்பிக்கையற்றவனுக்கினார்கள். எனவேதான் தெய்வ அருளை எண்ணி அக்காலத் தமிழன் சும்மா இருந்தான். இவைகளைக் கண்ணுற்ற வள்ளுவர், மனிதன் எண்ணியபடி எய்தமுடியும் (666) பெறியின்மை யார்க்கும் பழியன்று முயற்சியின்மைதான் பழி (618) என்றும் கூறினார்கள். மேலும் தெய்வ நம்பிக்கை கொண்டு முயற்சியற்று இருந்தவர்களை நோக்கி ,தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' (619) என்றார். அந்நாளில் வறுமையால் பிச்சை எடுப்பவனைப் பார்த்து 'அது அவன் தலை விதி' என்னும் போலித் தத்துவத்தை கூறியிருக்கின்றார்கள். அதைக் கேட்ட வள்ளுவர் உறுபசி, யும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ் சேரா தியலக் கூடியது அன்றோ நல்ல நாடு (734). அது அல்லாத நாடு நாடாகுமா? அரசாட்சி நன்ருக நடத்தாமல் கடவுளை அழைப்பதில் அர்த்தமுண்டா? எனவேதான் வள்ளுவர் 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் (1062) என்று கூறியிருக்கிறார். ஏமாற்றுக் கூட்டத்தை நன்ருகக் கண்டித்துள்ளார். அதனாலன்றோ அவர் இத்தனை நாள் மறைத்து வைக்கப் பட்டிருந்தார்!

"காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்
[யாமொரு நாள்
ஆடுது மென்ற அணிமிழைக்கவ் வாயிழையாள்
பீடன்றெனா விருந்தாள்"

(கனுத்திரமுரைத்த காதை 60-64)

அந்நாளில் பெண்கள் தெய்வ வழிபாடு செய்வதை வெறுத்திருக்கின்றனர். அப்படிச் செய்வது பத்தினிப் பெண்களுக்கு அழகல்ல என்று நினைத்துள்ளனர். பார்ப்பனப் பெண்கள்தான் போவது வழக்கம்போலும். தேவந்தி என்னும் பார்ப்பனப் பெண் காமவேள் கோட்டத் (கோயில்) திற்கு அழைக்க பத்தினிப் பெண்களுக்கு அது இயல்பன்று என்று கண்ணகி கூறிப் போக மறுக்கிருள். மேலும்

"சாமெனிற் சாதஞேத றன்னவன் றணந்த
[காலைப்
பூமணும் புனைத லின்றிப் பொற்புடன்
[புலம்ப வைகிக்
கர்மனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை,
[தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவொ டொப்பார் சேர்ந்தவன்
[செல்ல றீர்ப்பார்"

என்று சீவக சிந்தாமணியிலும் (1598) கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வள்ளுவரும் பெண்கள் தெய்வங்களை வணங்குவதைக் கண்டிக்கிறார். தெய்வத்தைத் தொழாமல் கணவனை மட்டும் தொழ வேண்டும். அப்படிக் கணவனை மட்டும் தொழுது வாழ்பவள் பெய் யென்ருலும் மழை பெய்யும் என்கிருர்.

'தெய்வந் தொழாஅள் கொழுநற்
[றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை' (குறள் 55)

எதற்காக தெய்வங்களை வணங்கக் கூடாது? தெய்வங்கள் அத்துணை கயவர்களா என்ன? என்று கேட்கலாம். ஆம் கயவர்கள்தான் என்கிருர். என்ன வள்ளுவரா அப்படிக் கூறுகிருர்! ஆம் கூறுகிருர் பாருங்கள், "தேவர் அனையர் கயவர், அவருந்தா மேவன செய்தொழுகலான்" (குறள் 1073) என்கிருர். கயவர்கள் தம் செயலை சரியா தவரு என்பதை நினைக்கிருர்களா? இல்லையே! அதுபோலத்தான் தேவர்களும் தம்மை நியமிப்பாரின்றிக் கயவர்போல் நடப்பவர்கள். (தேவர் அனையர் கயவர்—தேவருங் கயவரும் ஒரு தன்மையர்; அவரும்தாம் மேவன செய்து ஒழுகலான் -அஃதியாதனுனெனின். தேவரைப் போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவருந் தாம் விரும்புவனவற்றைச் செய் தொழுகலான்.) என்கிருர் பரிமேலழகர்! இதை வஞ்சப் புகழ்ச்சியணியாகக் கருதுகிருர் போலும். என்ன இருந்தாலும் அவர் ஒப்புவாரா?

'கயவரும் தேவரைப்போல் தாம் விரும்புகின்றவைகளைச் செய்து மனம்போன போக்கில் நடத்தலால், கயவர் தேவரைப் போன்றவர்' என்று டாக்டர் மு. வரதராசனுர் கூறி யிருப்பது போற்றத் தக்கதாகும். இதற்கு அகலிகை வரலாறு ஒன்றே போதுமான சான்ருகும்—தேவர்கள் கயவர்கள் என்பதற்கு.

வள்ளுவர் மக்களை விழிக்கச் செய்திருக்கிருர். யார் என்ன சொன்னுலும், சொன்னவர் யாரானுலும் மெய்ப்பொருளைக் காணுங்கள் என்கிருர். காரணம் அத்துணை மடமையைப் புகுத்தி யிருக்கின்றனர் பழமை வெறியர்கள். அதனுல்தான், "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்றும் (355) எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" (423) என்று கூறியிருப்பதும் காரணத்தோடல்லவா?

இனியாகிலும் திராவிடர்களாகிய நாம் தெய்வ வழிபாடு என்ற பேரால் மலிந்துள்ள கண்மூடி வழக்கங்களை விட்டுவிட முயற்சிக்க வேண்டும். அப்படி வணங்குபவர்கள் அதை இழிவான செயலாக எண்ண வேண்டும். நேர்மையுடன், நற்பண்புடன் வாழ முயலவேண்டும். 'இயற்கையைத்தான் திராவிடர்கள் வணங்கி யிருக்கிருர்கள். இவ்வழியைவிட்டுத் தவறியதால்தான் தமிழர் வாழ்வு தாழ்ந்தது' என்று திரு. வி. க. அவர்களும் கூறியிருக்கிருர்கள்.

—"இன்பன்"

திராவிட நாட்டுப் பிரிவினை:

உலக வல்லரசுகள் பேசக்கூடிய பிரச்சினையாக்ச் செய்வோம்.

அண்ணுவின் விளக்கம்

●

"எல்லா முஸ்லீம்களும், ஜின்னு பாகிஸ்தான் கேட்டபோது, 'நம் இனத்தலைவர் கேட்கிருர்—நம் நன்மைக்காகத் தான்' என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஒரே குரலாக எல்லா முஸ்லிம்களும் பாகிஸ்தான் வேண்டுமென்ருர்கள். ஆனுல் நம்மிடம் முஸ்லிம்களுக்கிருந்த இன உணர்வு இல்லை.

ஜின்னுவுக்கு கார் இருந்தது. பெட்ரோல் மட்டும் தேவைப்பட்டது. நமக்கோ காருக்கு 'டயர்' தேவைப்படுகிறது, பெட்ரோலுடன் கூட—சமுதாய ஒற்றுமை, இன ஒற்றுமை—என்னும் அந்த 'டயர்' கிடைத்துவிட்டால், போகவேண்டிய இடத்திற்கு போவதற்கான 'பெட்ரோல்' நம்மிடம் ஏற்கனவே உள்ளது.

இன்று, நமது திராவிட சமுதாயத்திடையே பேதம் மிகுந்திருப்பதுதான்—இனஒற்றுமை உணர்வு குன்றி இருப்பதுதான்—நமது பலவீனம்; அதனுல்தான் நாம், இன்னும் நமது விடுதலைப் போரில் வெற்றி பெற முடியாதவர்களா யிருக்கிருேம்.

நாம் இந்த சமூக உணர்வு பெற்றுவிட்டால் நமது பிரச்சினை இங்குமட்டும் பேசப்படும் பிரச்சினையாக இராது; நிச்சயம் உலக வல்லரசுகள் பேசக்கூடிய பிரச்சினையாக மாறிவிடும்.

எனவேதான், நாம் நாட்டிலே நிகழ்கிற அரசியல் தடுமாற்றங்களில் ஏமாந்து விடாமல், பொறுப்புணர்வுடன் நமது சமுதாய மக்களுக்கு இனஉணர்வை ஊட்ட வேண்டியவர்களா யிருக்கிருேம்.

நமது இம்மகத்தான பிரச்சினையைச் சிதைத்துவிட வைதீகமும் பழமையும் இன்று மீண்டும் தலைதூக்குகின்றன; அவை நம்மை அவ்வளவு சுலபத்தில் ஏய்த்துவிட முடியாது. என்ருலும் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நமது எதிர் சக்திகள் நம்மை மாய்த்து விட முடியாது என்ருலும், அவை நம்மை மாய்க்க முயற்சிக்கு முன்பாகவே நாம், திராவிட இனஒற்றுமை உணர்வைப்பெற்று விட வேண்டும்; அதற்கான வகையில் நாம் பணிபுரிய வேண்டும்" என கோவையில் 19-2-55-ல் நடைபெற்ற தி. மு. க. சிறப்புக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் விளக்கிப் பேசினுர்கள்.

உன்னதமான கலைவிழா

27-2-55 ஞாயிறு இரவு 10-மணிக்கு
திருப்பத்தூர் மீனுட்சி தியேட்டரில்
தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில்

●

எம். ஜி. இராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, ஜி. சகுந்தலா, நாராயண பிள்ளை, நகைச் சுவை நடிகர் முத்துக்கூத்தன் மற்றும்பல திரைப்பட நட்சத்திரங்கள் நடிக்கும்

இன்பக்கனவு

நாடகம் நடைபெறும்

கட்டணம்: ரூ. 10, 5, 3, 1. பெண்கள் அணு 8.

கேள்வி? பதில்.

— அஞ்சா நெஞ்சன் —

கே: மனிதன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளப் போதுமான அறிவு வளர்ச்சி யடைந்த பிறகு சமூகக் கட்டுப்பாடுகளை மதிக்க வேண்டுமா?

—எ. எஸ். ஆசைத்தம்பி, பம்பாய்

ப: தோழரே, சமூகக் கட்டுப்பாடுகள் என்பவை மனிதாபிமானம், நற்பண்பு ஆகியவைகளை வளர்க்கக் கூடியதா யிருப்பின் அறிவு வளர்ச்சி பெற்ற பிறகும் அதனை மதித்து நடப்பதால் மேலும் நன்மைதான் பயக்கும்.

*

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, காமராச நாடார் ஆட்சி இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் பதில் சொல்வீரா? டி. ரங்கசாமி, திருச்சி டவுன்

ப: அய்யா அரங்கசாமியாரே, காமராசர் மந்திரி சபையின் ஆயுட்காலம் எவ்வாறிருந்தால் உமக்குத் திருப்தியா யிருக்கும் என்பதை முதலில் தெரிவியுங்கள். பிறகு நான் பதில் சொல்லுகிறேன்.

*

கே: அரசியலை ஒரு சூதாட்டம் என்கிறார்களே, நீங்கள் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

—எம். ஷேக்தாவூத், ஆப்பூர்

ப: எட்டி யெட்டிப் பார்த்து கிட்டாது போகவே, சீச்சீ இந்த திராட்சை புளிக்கிறது என்று ஓலமிட்டதாமே ஒருநரி—அதைப் போன்று அரசியலில் புறமுதுக்கிட்டு ஓடியவர்கள் பேசும் "வேதாந்தம்" தான் அது.

*

கே: கழகத் தோழர்கள் சமூக சங்கங்களில் பங்கு கொண்டால்தான் திராவிடர் இயக்கம் வளர்ச்சியுறுமா?

—எ. எஸ். ஆசைத்தம்பி, பம்பாய்

ப: தோழரே, அப்படி யாரும் சொல்லவில்லையே! ஆனால் அந்தந்த சமூக மக்களைப் பழமை வெறியினின்றும் விடுபடச் செய்யும் வகையில் மட்டும் கழகத் தோழர்கள் யாராவது குறிப்பிட்ட சமூக சங்கங்களில் பங்கு கொள்வதில் தவறுமில்லை.

*

கே: காமராச நாடார் ஒரு செயல் வீரர் என்று அழுத்தமாக கூறினால் அது தவறாகுமா?

—எஸ். சுந்தரராமன், வடசென்னை

ப: தவறில்லையே — அழுத்தமாக மட்டுமல்ல ஆயிரம் முறை வேண்டுமானாலும் மேளதாளத்துடன் கூறுங்களேன் — இதில் யாருக்கு என்ன வம்பிருக்கிறது!

*

கே: அஞ்சா நெஞ்சனே, திராவிட நாடு கிடைக்குமோ கிடைக்காதோ என்று எனக்கு சந்தேகமா யிருக்கிறது, என்ன செய்யலாம்?

—கந்தசாமி, மண்ணடி

தோழரே, "சந்தேகம்" இருக்கிறதே அது பொல்லாத வியாதி! கடும் விஷத்திற்கு சமானம் என்று ஆங்கிலத்திலும் ஒரு முதுமொழி உண்டு. எனவே உங்களின் சந்தேக வியாதியைப் போக்கிக்கொள்ள "பகுத்தறிவு" மருந்து சாப்பிட்டு வாரும்.

*

கே: திரு. கொச்சி அரசியலில், காங்கிரஸ் கட்சி, தி. த. காவின் உதவியுடன் மந்திரி சபை அமைத்துள்ளதே! இதில் யாருடைய திறமை விளங்குகிறது?

— ஜெயவந்தன், நாகர்கோயில்

ப: திரு. கொச்சி காங்கிரஸ், பிற கட்சியின் உதவியின்றி மந்திரி சபை அமைக்க முடியாத அளவுக்கு கரைந்து வருகிறது அல்லது அதனின் ஜபர்தஸ்து ஆட்டம் கண்டிருக்கிறது என்பதை மக்கள் மன்றம் அறியும் வண்ணம் செய்தவரும், திரு. கொச்சி அரசியலில், விரல்விட்டு எண்ணக்கூடிய மைனாரிடி சக்தியை வைத்துக் கொண்டே காங்கிரஸ் மீது சவாரி செய்தவருமான பட்டம் தாணு அவர்களின் திறமையைத்தான் காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பின் முறை எடுத்துக் காட்டுகிறது.

பெருமை பெற்ற பெண்ணுலகம்!

"சரியாப் போச்சு போ...... பொம்பளைங்க இந்த வேலைக்கெல்லாம் வந்துட்டா......ஆம்பிளைங்க ஏதுக்கு உலகத்திலே? பேசாமெ சமையலுக்குப் போக வேண்டியது தான்" என்று மூலையில் நின்று முணு முணுத்தான் ஒருவன். அவன் மட்டுந்தானா அப்படிச் சொன்னான். அங்கிருந்தவர் அத்தனை பேருமே சொன்னார்கள்.

"காலா காலத்திலே கலியாணத்தைப் பண்ணி வைக்கிறேன், ஏன் இப்படி இந்த உதவாக்கரை வேலையிலே யெல்லாம் சேர்ந்து உடம்பைக் கெடுத்துக்கிறே" என்று அந்தப் பெண்ணின் தந்தையே சொன்னார். அவள் கேட்கவில்லை.

உதவாக்கரை உத்தியோகம் என்று அவர் சொன்னது 'ரயில் டிரைவர்' உத்தியோகமாகும். டியன் க்வீ-யிங் என்ற அந்த சீனப் பெண்ணுக்கு அப்பொழுது 24 வயது நடந்து கொண்டிருக்கிறது. மீன் பிடிக்கும் ஒரு ஏழைக்குப் பிறந்த அவள் சிறுவயது முதலே வேலை செய்து பிழைக்க ஆரம்பித்துவிட்டாள். தந்தைக்கு உதவியாக அலைவீசும் ஆழ்கடலில் மீன் பிடிக்க, ஏழு வயது முதலே செல்ல ஆரம்பித்து விட்டாள். பதினாறுவது வயதிலே டெய்ரன் நகரிலும் போர்ட் ஆர்தர் நகரிலும், அச்சுக் கூடங்களில் வேலை செய்தாள். 1947-ல் டெய்ரன் நகரிலிருந்த சாங்சுன் ரயில்வே ரிப்பேர் ஷாப்பிலிருந்த காண்டீனில் சாப்பாட்டுக் கூப்பன்களை விற்றாள். தான் சம்பாதித்த ஓரளவு பணத்தைக் கொண்டு குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டாள்.

அந்த ரிப்பேர்ஷாப்பில் தினமும் இராப் பள்ளிக்கூடங்கள் நடந்து வந்தன. டியன் க்வீ யிங்கும் பகலில் வேலை செய்துவிட்டு இரவில் பள்ளியில் பயின்றாள். அதன் மூலம் சிறுகச் சிறுகத் தன் அறிவை விருத்தி செய்து கொண்டாள் ஒரு நாள் அந்த தொழிற்சாலை அதிகாரிகளில் ஒருவரான லீ ஹுவான்-சாங் என்பவர், பெண்களின் அடிமைத்தனம் அழிய வேண்டுமென்றும், அவர்களும் தொழில் துறைகளிலே ஆண்களைப்போல் சமமாக ஈடுபடவேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் என்றென்றும் அடிமைகளாகவே இருக்க நேரிடுமென்றும் எச்சரித்தார். அந்த எச்சரிக்கை டியன் க்வீ யிங்கின் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது.

ஓழிந்த நேரங்களில் அடிக்கடி அவள் அங்கிருந்த தொழிலாளர் சங்கத்துக்குப் போவதுண்டு. மற்ற நாட்டுப் பெண்களின் தொழில் திறமைகளைக் காட்டும் படங்கள் அங்கு தொங்கின. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் "சீனப் பெண்களும் எப்பொழுது இம்மாதிரி ஆகப் போகிறார்களோ?" என்ற எண்ணம் அவளுள்ளத்தில் எழும்.

ஒருநாள் அங்கு பணியாற்றி வந்த ரஷ்யஉயர்தர அதிகாரியான லிசாப் (Lisoff) என்பவரை அணுகி "சீனப் பெண்களான நாங்கள் புகை வண்டியை ஓட்ட முடியுமா?" என்று விளையாட்டாகக் கேட்டாள். லிசாப் சிரித்துக் கொண்டே 'ஏன் முடியாது? எங்கள் நாட்டில் பெண்கள் சர்வ சாதாரணமாக ரயில் ஓட்டுகிறார்கள். டாங்குகள் ஓட்டுகிறார்கள், விமானங்கூட ஓட்டுகிறார்கள். அப்படி யிருக்கும்போது சீனப் பெண்களால் முடியாத காரியமுமிருக்கிறதா? என்று கேட்டார் அவர்,

அவள் விளையாட்டாகக் கேட்ட அந்தக் கேள்வியின் பலன் என்ன தெரியுமா? 1949 ஜூனில் 'சாங் சுன்' ரயில்வே நிர்வாகம் பெண்களையும் ரயில் டிரைவர்களாகப் பழக்க முடிவு செய்தது. டியன் க்வீ-யிங் தன் பெயரை முதன் முதலாகப் பதிவு செய்தாள். அவளுடன் இன்னும் சிலர் சேர்ந்தார்கள்,

இதைக் கண்டுதான் ஆண் தொழிலாளிகள் பொருமினார்கள்; அவளுடைய தந்தை தடுத்தார்: யாரையும் சட்டை செய்யவில்லை அவள்.

பயிற்சிக்கு வந்த முதல் வாரத்தில் பயிற்சியாளருக்கு கரியள்ளிக் கொட்டப் பயிற்சி யளிக்கப்பட்டது. இயந்திர நுணுக்கங்களையும், அவற்றைக் கையாளும் முறைகளையும் சீக்கிரமே அவளுக்குக் கற்பித்தார்கள்,

அவர்களுடைய உடல் நலத்திற்குப் பங்கம் ஏற்படக் கூடாது என்பதற்காக ரயில் நிர்வாகம் அவர்களுக்கு விசேஷ வசதிகளைச் செய்து கொடுத்தது. நல்ல உணவும், சம்பளமும் அன்றாடம் கொடுக்கப்பட்டன. ஒருநாள் வேலை செய்தால் மறுநாள் விடுமுறை யளிக்கப்பட்டது. உடல் நிலை சரிவர இல்லையென்றால் ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார்கள். அனுபவம் வாய்ந்த ரயில் டிரைவர்களே அவர்களுக்குப் பயிற்சி யளிக்க நியமிக்கப்பட்டனர். பயிற்சிபெறுபவர்களுக்கு ஆபத்தேற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. லீ ஹுவாங்-சாங், பயிற்சியாளரை அடிக்கடி தானே வந்து கவனித்துக் கொண்டார்.

பயிற்சிக் காலம் முடிந்ததும் ஒருவருடைய உதவியுமில்லாமல் ரயிலை ஓட்டிக் காட்ட வேண்டி வந்தது. முதல் தடவையாதலால் டியன் க்வீ-யிங்கிற்குப் பயமும் திகிலும் ஏற்பட்டன. கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. உடலெல்லாம் வியர்த்து விட்டது. கரங்களெல்லாம் நடுங்கின. கரியை அள்ளிக் கொட்ட முடியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு அன்று அவள் நல்ல பெயரெடுத்தாள்.

கொஞ்ச நாளில் ரயிலோட்டுவது அவளுக்குச் சர்வ சாதாரணமாயிற்று. 1949 செப்டம்பர் மாதத்தில் ரயில்வே நிர்வாகத் தலைவர், தலைமை இன்ஜினியர், ஏனைய நிபுணர்கள் ஆகியோர் முன்னிலையில் நடந்த தேர்வில் அவள் முதன்மையாகத் தேறினாள். 1950 பிப்ரவரி 25-ந் தேதி நடந்த கடைசித் தேர்விலும் அவள் வெற்றிகரமாகத் தேறினாள். அதே ஆண்டு மார்ச் மாதம் 8-ந்தேதி ரயில் டிரைவர் உத்தியோகம் அவளுக்குக் கிடைத்தது. உதவாக்கரை உத்தியோகம் என்று சொன்ன அவளுடைய தந்தை வாயடைத்துப் போனார். ஆண் தொழிலாளர்கள் ஆச்சரியப்பட்டார்கள். லீ ஹுவாங்-சாங்கும், லிசாப்பும் மகிழ்ச்சி யடைந்தார்கள். சீனப் பெண்ணுலகம் பெருமை அடைந்தது.

—வ. பாலசுப்ரமண்யம்

திராவிடன் அளிக்க யிருக்கும் புதிய விருந்து!

"விசித்திரச் சித்தர்கள்"

புதுமையான கருத்துக் கொண்ட புரட்சிகரமான பகுதி!

திராவிடனில் எதிர்பாருங்கள்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

●

வணக்கம், பிப்ரவரி திங்கள் முடிய பட்டியல் விவரம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் கண்டுள்ளபடி தொகையை உடனே அனுப்பிவைக்குமாறு நினைவூட்டுகிறோம்.

—நிர்வாகி 'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 25—2—55 : வெள்ளி

மார்ச். 20 : மறவாதீர்கள்

●

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு இத்திங்கள் 20-ம் நாள் கோவையில் கூடி முக்கிய முடிவுகளைச் செய்திருக்கிறது. அதன் விவரத்தைப் பிரிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம. இப்பொதுக்குழுவின் முடிவுகள், தி. மு. கழகத் தோழர்கள் மட்டுமல்லாது நம் மாநில ஆட்சியாளரும் குறிப்பாக தேசியத் தோழர்களும் கூர்ந்து கவனிக்க வேண்டியவைகளாகும்.

சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகளாகியும் நமது மாநில மக்களின் வாழ்வு வளம்பெற ஆவன செய்யப்படவில்லை. குறிப்பிடத்தக்க தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், ஆராய்ச்சி நிலையங்கள் வடக்கே நிறுவப்பட்டுள்ளன. தென்னாட்டைப் பொறுத்தவரை டெல்லி ஆதிக்கம் வெறும் வாய்ப் பந்தல்தான் போட்டு வருகிறது. இதற்குப் பெயர்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்றும் கூறுகிறது,

திராவிட முன்னேற்றக் கழகம், நேரு சர்க்காரின் இந்த ஓரவஞ்சனையை சுட்டிக் காட்டிய சமயங்களிலெல்லாம் தென்னாட்டிலுள்ள தேசியத் தலைவர்களும் ஆட்சியாளரும் 'எங்கள் நேரு சர்க்கார் பத்தரை மாற்றுத் தங்கம் ஆயிற்றே இவ்வாறு பழி சுமத்துவது மாபெரும் பாதகம்'' எனத் தப்பட்டையடித்து வந்தனர்! ஆனால் இன்றோ நம் மாநில சர்க்கார், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் ஆதிக்கம் செலுத்தும் டெல்லி தேவதைகளின் ஓரவஞ்சனையை அதுவும் அத்தேவதைகளின் முன்னிலையிலேயே எடுத்துக் கூறி எச்சரித்திருக்கின்றனர். இதுபோன்ற குமுறல்கள் ஆந்திர, கேரள, கன்னட ராஜ்யங்களிலும் அடிக்கடி ஏற்படுகின்றன. அதிலும் அமைச்சர்களே பரிதாபச் சிந்து பாடுவதை அரசியல் யூகம் படைத்தவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறோம்,

இன்னும் சொல்லப்போனால் நேருசர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டங்கள் வடநாட்டை மட்டுமே வளப்படுத்தி வருகிறது என்ற பகிரங்க குற்றச் சாட்டை தென்னாடு மட்டுமல்லாது வங்கமும் வேதனையுடன் கூறுகிறது.

அண்மையில் மேற்கு வங்க மருத்துவ மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசிய இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் மேகானந்த் ஷா அவர்கள், ''மத்திய சர்க்கார் இதுவரை தீட்டியுள்ள பெரிய திட்டங்களிலெல்லாம் மேற்கு வங்கத்தின் மீது அனுதாபமின்றியே நடந்து கொண்டிருக்கிறது; சுதந்திரம் வந்த பிறகு மேற்கு வங்கம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பின்தங்கிப் போயிற்று'' எனக் கூறியிருக்கிறார்.

எனவே டெல்லி ஆதிக்கத்தின் ஐந்தாண்டு திட்டங்கள் என்பவை, இந்திய மாநிலங்களின் வரிப்பணத்தை யெல்லாம் கொட்டி அளந்து ஏற்கனவே வளம் பெற்றுள்ள வடநாட்டினை மேலும் டாலர் கொழிக்கும் நாடாக நிலைபெறச் செய்வதற்கு செலவிடுவதும், தொழில் துறையில் ஏற்கனவே பின்தங்கியுள்ள தென்னாட்டை வஞ்சிப்பதும்தான் என்பதை திராவிட தேசியத் தலைவர்களும், அமைச்சர்களுமே கூறுகிறார்களென்றால் ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் திராவிடம் எவ்வளவு நாசுக்காக ஏமாற்றப்பட்டு வருகிறது என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ?

வடநாட்டு **ஆதிக்கத்தின்** இப்போக்கினைச் சுட்டிக் காட்டிக் **கண்டித்தும்,** எதிர்த்தும், அறிவுரை கூறியும் அவ்வாதிக்க பீடத்தினர் தங்கள் போக்கினை திருத்திக் கொண்டார்களில்லை. எனவே இவ்வநீதியை மக்கள் மன்றத்தின்முன் மேலும் தெளிவுபடுத்த நாடெங்கும், தி. மு. கழகத் தோழர்கள் **''20—3—55 அன்று ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்''** நடத்தி கண்டனத் தீர்மானங்களை நேரு சர்க்காருக்கு அனுப்பி வைக்குமாறு பொதுக்குழு முடிவு செய்திருப்பதை; கழகத் தோழர்கள் மட்டுமல்லாது, தென்னாடு வஞ்சிக்கப்படுகிறது என்ற உண்மையை அறிந்துவரும் எல்லோருமே கட்சி பேதங்களை மறந்து வரவேற்பார்கள் என்றே நம்புகிறோம்.

அடுத்தபடியாக—அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டுள்ள **'சோஷலிசம் மாதிரி'** பொருளாதார அமைப்பு என்ற முடிவின் கண்துடைப்பு வித்தையையும் தி.மு. கழகப்பொதுக்குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆவடி தீர்மானம் ஐந்தாண்டு திட்டத்தின் ஓரவஞ்சனையை மறைக்க விடும் ஓர் திரையாகும் என்று கூறினும் மிகையாகாது.

திராவிட இயக்கத்தாரால் நாட்டிலே வளர்ந்துவரும் மறுமலர்ச்சிக் கருத்துக்களைத் தடுக்க, சென்னை மாநில சர்க்கார் கொண்டு வந்திருக்கும் **நாடகத் தடைச் சட்டத்தை** பொதுக்குழு வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், எப்போதும் போல மேலும் **தீவிரமாகவும், பண்புடனும்** திராவிட இயக்கக் கருத்துக்களடங்கிய, நாடகங்களை நடத்தி மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பரப்புமாறு கழகத் தோழர்களுக்குப் பொதுக்குழு வேண்டுகோள் விடுத்திருப்பதை கழக நிர்வாகிகள் கூர்ந்துகவனிக்கவேண்டுவதுடன் அத்தகைய பண்பும், கொள்கையும் அஸ்திவாரமாகக் கொண்ட நாடகங்களை நடத்துவதற்குமுன் கழகத்தோழர்கள், கூடுமானவரை மாவட்ட கமிட்டி மூலமாக தலைமை நிலைய அனுமதி பெற்று நடத்துவதே நன்மை பயக்கும் என்பதையும் கழகத் தோழர்கள் கவனிக்க வேண்டுகிறோம். அதுபோலவே இச்செயல்களில் நாடகத் தடைச் சட்டம் குறுக்கிடுமானால் அதனை எதிர்த்து ஆவன செய்ய பொதுச்செயலாளருக்கு அதிகாரம் அளித்திருப்பதை அரசியலாரும் உணர வேண்டுகிறோம்.

தொழிலாளரிடை பணிபுரிவது குறித்தும் பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது. 31-5-53-ல் நடைபெற்ற அரக்கோணம் பொதுக் குழுவின் முடிவை செயல் முறையில் கொண்டுவரும் வகையில் தி. மு. கழகத் தோழர்கள் **தொழிலாளரிடை பணிபுரிந்து, அதன் விவரத்தை உடனுக்குடன் தலைமை நிலையத்துக்கு அறிவிக்குமாறு** முடிவு செய்திருப்பதை கழகத் தோழர்கள், குறிப்பாக நிர்வாகிகள் மனதிற்கொண்டு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டினை ஜூன் திங்களில் நடத்துவதென்று பொதுக் குழு முடிவு செய்திருக்கிறது. இது குறித்து ஏற்கனவே(26-11-54 இதே பகுதியில்) நமது கருத்தைத் தெரிவித்திருந்தோம். மாநில மாநாடு நடைபெறுவதென்றால் ஆரம்ப செலவுக்கே பெரும் நிதி தேவைப்படு மென்பதை, கழக நிர்வாகிகள் அறியாததல்ல. எனவே இந்நிதியை வசூலிக்க, கோவைப் பொதுக்குழு நியமித்துள்ள துணைக் குழுவினருக்கு ஆங்காங்குள்ள கழக நிர்வாகிகள் தக்க துணைபுரிந்து மாநில மாநாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கவேண்டுவது முக்கிய கடமையாகும் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிய பொறுப்புடன் தற்போதைய பொதுக்குழுவின் ஆயுட்காலம் முடிவுக்கு வந்துள்ளது. இதுவரை பொதுச் செயலாளருடன் துணைநின்று திட்டங்கள் தீட்டி பணிபுரிந்த பொதுக்குழு, கழகத்தின் எதிர்கால ஆக்க வேலைக்கும் வழிவகை அமைத்துள்ளது. அதனைக் கழகத் தோழர்கள் கூர்ந்து கவனித்து விரைவில் தேர்தல் மூலம் அமைக்கப்படும் சிற்றூர் கிளை—மாவட்டக் குழு, பொதுக்குழு ஆகியவைகளின் வாயிலாக தொடர்ந்து—தீவிரப் பணியாற்றவும் வேண்டுகிறோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பொதுச் செயலாளராயிருந்து நமக்கெல்லாம் அவ்வப்போது அறிவுரைதந்து அரும்பணியாற்றிய நமது அண்ணா அவர்களுக்கு தி. மு. க. கிளைகள்—மாவட்ட — பொதுக்குழு ஆகியவைகள் நன்றியும் வணக்கமும் செலுத்துவதென்பது, மாநில மாநாட்டினைச் சிறப்புற நடத்தி அதில் காணப்படும் முடிவுகளுக்கேற்ப புதிய பொதுச் செயலாளருக்கும், அவரின் செயற்குழுவுக்கும் மனப்பூர்வமான ஒத்துழைப்பு தந்து—முன்னைய பொதுக்குழு விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து செய்வதே யல்லாது வேறில்லை. அத்தகைய பணிக்கு அண்ணா அவர்களின் அரியஆலோசனையும் வழிகாட்டும் தன்மையும் பக்கத்துணையும் புதிய பொதுக்குழுவுக்கு இருந்து வருமென்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், கடந்த ஆண்டுகளில் கழக வளர்ச்சிக்கான துறைகளில் பணியாற்றிய பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், அவர்களைத் தேர்ந்தெடுத்தபொது உறுப்பினர்களுக்கும் கோவை பொதுக் குழுவை சிறப்புற நடத்தித்தந்த கோவை நகர தி. மு. கழகத்தினருக்கும் ஏனையோருக்கும் நமது நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

●

நடக்க இருப்பவை

கும்மிடிப்பூண்டி தி.மு.க. 3-வது ஆண்டுவிழா

26—2—55 சனிமாலை 5-மணிக்கு கும்மிடிப்பூண்டி கடை வீதி அடுக்க திடலில் தோழர் டி. மாசி முத்து அவர்களின் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி நடராசன், காஞ்சி கல்யாண சுந்தரம், ஆ. கிருஷ்ணன், அ பெ. கணேசன் பேசுவர்.

உடுமலை தி. மா. மு. கழகம்

27—2—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு உடுமலை பிரேவோ திடலில் பொதுக்கூட்டம் தோழர் ப. நாராயணன் தலைமையில் நடைபெறும். தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் சொற்பொழிவாற்றுவார்.

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்

சென்னை 8-வது வட்டம் பெத்துநாயக்கன் பேட்டை லாயர் சின்னத்தம்பி முதலித்தெரு 10வது எண்ணுள்ள இம்மன்றத்தில், 27—2—55 ஞாயிறு காலை 8- மணிக்கு தோழர் ஏ. வி. ஆசைத்தம்பி தலைமையில் டாக்டர் சி. நடேசனார் நினைவு நாள் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

திருவொற்றியூர் தி. மு. கழகம்

27—2—55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு காலடிப்பேட்டை சன்னதித் தெருத் திடலில் தோழர் எம்.கணபதி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும் தோழர்கள் சி. பி. சிற்றரசு வி. எஸ். கோவிந்தராசன் பேசுவர்.

திருப்பத்தூர் (வ. ஆ.) பகுத்தறிவு மன்றம்

28—2—55 திங்கள் மாலை 6-மணிக்கு திருப்பத்தூர் கச்சேரித் தெரு திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும். வழக்கறிஞர் ஜி. சாமி பி. ஏ. பி. எல். தலைமையில் தோழர் என். வி. நடராசன் 'அன்றும் இன்றும்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

சட்டத்தால் மட்டுமே சமூக முன்னேற்றம் வெற்றியுறுமா?

காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்களின் தலைமையுரை

12-2-55-ம் நாள் நடைபெற்ற கர்நாடக தி. மு க. சமூக சீர்திருத்த மாநாட்டில் தலைமை வகித்த 'நம்நாடு' துணை ஆசிரியர் காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் ஆற்றிய தலைமையுரை.

*

'நம்மைத் தவிர, இந்த நாட்டில் உள்ள அரசியல் கட்சியினர், சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுவதில்லை; அவர்கள், இந்தச் சமூகம் வெகுவாக முன்னேறி விட்டதாக நினைக்கிறார்கள்; நாம் மட்டும்தான், 'இந்தச் சமூகம் பின்தங்கிக் கிடக்கிறது; சீர்குலைந்து பாழ்பட்டுக் கிடக்கிறது' என்று எண்ணி, சீர்குலைந்துள்ள சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று நினைக்கிறோம்;

நமது சமூக சீர்திருத்தப் பணியின் நோக்கமெல்லாம், திராவிடர் சமுதாயம் தனக்கு வேண்டியன இன்னின்னவை, தன்வாழ்வு சிறப்புற இருக்கத் தேவையானவை என்ன என்பவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு தன்னைத் தானே காலத்திற்கொப்ப திருத்தியமைத்துக் கொண்டு, முன்னேற முற்படுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதுதான்.

சிலர், அரசியல் அதிகாரமும், பொருளாதார வசதியும் இருந்து விட்டாலே ஒரு சமூகம் முன்னேறி விட்டதெனக் கொள்கிறார்கள். மனித சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கிற வாய்ப்புகளில் அரசியல், பொருளியல் இரண்டும் முக்கியமானவைதான். 10 X 3

ஆனால், ஒரு சமுதாயத்தின் வாழ்வு இந்த இரண்டுடன் முற்றுப் பெற்று விடவில்லை என்பதை அவர்கள் உணர வேண்டும்.

நம் சமுதாயம் பின்தங்கிக் கிடக்கிறது—சீர்குலைந்திருக்கிறது என்பதற்கு இந்த நாட்டின்—இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறே நல்ல சான்றாகும்.

இந்தியாவின் வரலாற்றைப் புரட்டினால்—கணவாய்கள் வழியாக செங்கிஸ்கான் வந்தான்; அலெக்சாண்டர் வந்தான்; கோரி வந்தான்; கஜினி வந்தான்; பின்பு போர்த்துகீசியர் வந்தார்கள்; அதன்பின் டச்சுக்காரர்கள்; பிரெஞ்சுக்காரர்கள் வந்தார்கள்; அதன் பிறகு வெள்ளைக்காரர்கள் வந்தார்கள்—என்று சரித்திரச் சம்பவங்கள், வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வந்தார்கள்—என்றே கூறுகின்றன.

இந்தச் சமுதாயம் முன்னேறிய சமுதாயமாகயிருந்திருந்தால்—சீர்திருத்தப்பட வேண்டாத சமுதாயமாயிருந்தால், அன்னியரின் படையெடுப்புகள் ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கடுக்காய் வளர்ந்து கொண்டே இருந்திருக்குமா!

இந்தப் படையெடுப்புகளுக்குக் காரணமெல்லாம், இங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு நாட்டுப்பற்று இல்லாதிருந்ததும், அந்த நாட்டுப்பற்று இருப்பதற்குத் தேவையாயிருக்கிற 'வாழ வேண்டும்' என்ற எண்ணம் அவர்களிடை இல்லாமற் போனதும்தானே?

ஒரு வீடு இருக்கிறது; அந்த வீட்டில் பெருச்சாளிகள், அடுத்தடுத்து குழி பறித்து வீட்டை நாசப்படுத்துகின்றன என்றால், அந்த வீட்டின் தளவரிசை சரியாக, உறுதியாக அமையப் பெறவில்லை—கலகலத்து விட்டது என்பதுதானே பொருள்?

அதேபோலத்தான், இந்நாட்டு மக்கள் 'வாழ வேண்டும்—அதுவும் அடிமையாகாமல் வாழ வேண்டும்' என்ற எண்ணமும் உறுதியும் இல்லாதவர்களாக இருந்ததின் விளைவுதான் இந்த நாட்டுச் சரித்திரத்தில் 'வந்தார்கள்—படையெடுத்து வந்து அடிமையாக்கினார்கள்' என்றே இருக்கிறது.

படையெடுப்புகளை வரவேற்றார்கள் என்பது மட்டுமல்ல; வரவேற்றதற்குக் காரணம், வலுவின்மையாகவும் இருந்திருக்கலாம்; வந்தவர்களுடன் கூடடுச் சேர்ந்து சொந்த நாட்டவரை அழுத்த வஞ்சகச் செயல்களும் புரிந்திருக்கின்றனர்—விந்தியத்திற்கு வடக்கே இருந்தவர்கள்.

பிறநாட்டவர்களுக்கு வாழ்க்கையில் பற்று இருக்கிறது. 'நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்!' என்று ஒரு வெளிநாட்டவரைக் கேட்டால் அவர், 'நான் நலமாகவே இருக்கிறேன்' என்று சொல்லுகிறார், அல்லது தனக்கு ஏதேனும் இன்னல்கள் இருந்தால் அதையும் துணிவுடன் வெளியில் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் யாரையாவது அப்படிக் கேட்டால், அவர் 'ஏதோ இருக்கிறேனுங்க' என்று பெருமூச்செறிகிறார். நன்றாக வாழ்வதாகவும் கூறுவதில்லை. வாழ முடியவில்லை என்பதையும் துணிவுடன் வெளியிடுவதில்லை.

இந்த நிலையின் பலன்தான், வெளிநாட்டிலிருந்து யார் யார் படையெடுத்து வந்தாலும், அவர்களை எல்லாம் 'வா வா' வென்று வரவேற்றது.

இந்தியக் குடியரசுத் தலைவரான இராசேந்திர பிரசாத், சமீபத்தில் பேசுகையில் 'நாம் ஒரு உயர்ந்த பொற்காலத்தையுடையவர்களாயிருந்தவர்தம் பரம்பரையினர்' என்று குறிப்பிட்டார். விந்தியத்திற்கு வடக்கே எப்போது 'பொற்காலப் பரம்பரை' இருந்ததோ நாமறியோம். இருந்ததெல்லாம் நான் முன்பு குறிப்பிட்ட 'படையெடுத்து வந்தாரை எல்லாம் வரவேற்று அடிபணிந்தார்களே' அதுதான் இருந்தது.

உலகத்தில் வாழும் மனித சமுதாயத்திற்கு இந்த இந்தியத் துணைக்கண்டம் என்ன தந்தது?

இதோ ரயில்—ஏறிச் செல்; கப்பல்—கடல் பிரயாணம் செய்; இதோ விமானம்—பறந்து செல்; மின் விளக்கு—ஒளிதர; ஒலிபெருக்கி—உபயோகிக்க; வானொலி—உலகம் பேசுவதைக் கேட்க! —என்று இவைகளையும், இவை போன்ற எத்தனையோ எண்ணற்ற பொருள்களையும் மேலைநாடுகள் உலக மனித சமுதாயத்திற்குத் தந்துள்ளனவே அதே போன்று இந்தியத் துணைக்கண்டமும் தனது பங்கிற்கு (Material Contribution of India) என்ன தந்தது!

என்றாலும் டாக்டர் இராசேந்திர பிரசாத் கூறுகிறார்—'பொற்காலப் பரம்பரையினர்' என்று! என்ன பொருள் அதற்கு? இந்தியா உலக சமுதாய வளர்ச்சிக்கு உருப்படியான ஒன்றையும் தராததினால் 'ஆத்மார்த்தத் துறையில் நாம் உயர்ந்தவர்கள் — வேறெவரைக் காட்டிலும்' என்று பெருமை யடித்துக் கொள்கிறார்கள்; அவ்வளவுதானே?

ஆத்மார்த்தத்துறை போன்ற நிலையான உண்மைகளின் அடிப்படை ஏதும் இல்லாது கற்பிக்கப்பட்ட தத்துவங்கள் தான் (Speculative Philosophy) இந்தியத் துணைக்கண்டத்தில் மிச்சம்; அவைதான் மக்களிடத்தில் 'வாழ வேண்டும்' என்ற எண்ணமும், நாட்டுப் பற்றும் அறவே இல்லாமற் போகுமாறு செய்தன; அதன் விளைவு 'வந்தார்கள்—வந்தார்கள்'—என்ற வரலாறு.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டிலே, நாட்டு மக்களிடையே ஒருவகை விழிப்புணர்வு — 'வாழ்வு தேவை' என்ற உணர்வு ஓரளவு ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணமே வெள்ளையரின் வருகைதான். நான் இப்படிக் கூறும்போது, சிலர் நம்மை 'தேசத் துரோகிகள்' என்று எண்ணவும் கூடும்.

வெள்ளையரின் வருகையால் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்பட்ட தீமையின் அளவுக்கு நன்மைகளும் ஏற்படத்தான் செய்தன,

இங்கிலாந்து போன்ற நாட்டில் சமூகம் உருவாக்கப்பட்டு நூற்றாண்டுக் கணக்கில் ஆகிவிட்டது; இந்த நாட்டில் இன்னும் சமூகங்களை ஆக்குகிற குடும்பங்களே உண்டாக்கப் படவில்லை.

திருமணச் சட்டங்கள் (Civil Marriage Act) இங்கிலாந்திலே, பிரான்சிலே இன்னும் அதுபோன்ற நாடுகளிலே எல்லாம் உருவாகி, பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இங்கு—இந்தியத் துணைக்கண்டத்தில் 'திருமணச் சட்டம்' பற்றிப் பேசப்படுகிறது. பலத்த கருத்து வேற்றுமையுடன், நாம் இப்போது தான் குடும்பமே உண்டாக்குகிறோம், அங்கெல்லாம் சமூகம் உருவாக்கப்பட்டு விட்டது. இங்கு இப்போது உண்டாக்கப்படுகிற குடும்பங்கள் வளர்ந்து, காலப்போக்கிலே சமூகம்—புதியதொரு சமுதாயம் உருவாக வேண்டும். அதற்கிடையில் இப்போதிருக்கிற உளுத்துப் போன சமுதாயம் — 'பழம் பெருமை மிக்கது—நிரம்ப வளர்ந்துவிட்டது' என்று யாராவது கூறினால் அது உண்மைகளை மறைக்கப் பார்க்கிற செயலாகும்.

இப்போதுள்ள சமுதாயத்தைப்பற்றி பேசுவதானால் சில பல உண்மைகளை சொல்லியாக வேண்டும். அந்த உண்மைகள் ஆபத்து மிகுந்தவைதான். அதனாலேயேதான் பலர் அந்த உண்மைகளைச் சொல்ல பயப்படுகிறார்கள்.

இந்தச் சமூகத்தைச் சீரழித்த அந்த உண்மைகளைச் சுட்டிக் காட்டி அவை, களையப்பட்டாலன்றி சமுதாயம் முன்னேறாது—வளராது—நாகரீகம்பெறாது என்று கூறுபவர்கள் நாம் ஒருவர்தான், சமுதாயம் சரி செய்யப்பட அல்லது இப்போதிருக்கிற சமுதாய அமைப்பு மாறி புதியதொரு அமைப்புவர சிலர் சட்டத்தையும் அவற்றை இயற்றக் கூடிய அதிகாரத்தையும் கொண்டு சாதித்துவிடலாம் என எண்ணுகிறார்கள்.

சட்டம் செய்து விட்டாலே சமூகம் பண்படும் என எண்ணுவது தவறான போக்காகும்.

மதுவிலக்கு சட்டம் சென்னை மாநிலத்தில் அமுலில் இருக்கிறது. ஆனாலும் மதுவிலக்கு வெற்றி பெற்றிருப்பதாக ஆட்சியாளரே கூறத் துணியவில்லையே! இன்னும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் திருட்டுத் தனமாக குடித்துவிட்டு ஆடுவதும் நாட்டில் நடைபெறத்தானே செய்கிறது!

மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் எதை அரசாங்கம் எதிர்பார்க்கிறதோ அதனை, இந்தச் சட்டம் யாருடைய நன்மைக்காக செய்யப்பட்டதோ அந்த மக்கள் உணரவில்லை, மக்களுக்கு அது உணர்த்தப்படவில்லை. சட்டத்தின் நோக்கம் மக்களுக்குப் புரிந்திருந்தாலல்லவா அந்தச் சட்டத்தைக் காப்பதில் அக்கரை காட்டுவார்கள் அவர்கள்.

எனவேதான் நாம் கூறுகிறோம்—சமுதாயத்திற்குச் செய்யப்பட வேண்டியவை எவை என்றாலும் அந்தச்சீர்திருத்தத்தை—மாற்றத்தை ஏற்றுக் கொளவதற்கான அறிவை மக்களிடை பரப்ப வேண்டும்—என்று!

சட்டங்கள் மக்களுக்கு அச்சத்தைத் தரக் கூடாது. சட்டம் நமது தேவைக்காக உள்ளது. அதை நாம் காக்க வேண்டும் என்று மக்களே எண்ணினாலன்றி சட்டங்கள் கோரிய பலனைத் தரமாட்டாதவையாகும். சமுதாயமே தனது தேவைகளை உணர்ந்து அதற்கொப்பச் சட்டங்கள் கோர வேண்டுமேயன்றி சட்டங்கள் அதிகாரத்தின் துணைகொண்டு நிலைநிறுத்தப்படக் கூடாது.

நமக்கு அப்படி ஒருசமுதாயம் வேண்டாம், அதிகாரத்தின் துணைகொண்டு சட்டம் நிலைநாட்டப்படுகிற ஒரு சமுதாயம் எப்படி இருக்குமென்பதற்கு ரஷ்யா ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும், இன்று ரஷ்யாவில் நிகழ்கிற அரசியல் திடீர் மாற்றங்கள் இதைத்தான் நமக்குச் சொல்கின்றன.

இன்று நடைமுறையில் உள்ள (English System of Education) ஆங்கில முறைக்கல்வி குறைபாடுகளுடையதாக இருக்கிறதென பலர் கூறுகின்றனர் இப்போதுதான் கல்வி கற்க வேண்டும். நாம் படிக்கவில்லை, நமது சந்ததிக்காவது கல்விக் கண்ணைத் திறந்துவிடுவோம் என்ற எண்ணம் சற்று பெருகி வருகிறது. ஒரு சமுதாயம் கல்வி அறிவு பெற்றவர்களை பெருவாரியாகக் கொண்டிருததல் வேண்டுமென்பது மிகமுக்கியமானதும் அவசியமானதுமாகும். அந்த நிலையில் கல்வித் தாகம் கொண்டுள்ள திராவிடர் சமுதாயம் இப்போது பெற்று வருகிற கல்விக்குக் கேடு பயக்கும் வகையில்—ஊறு செய்யும் வகையில் புதியதிட்டங்கள் அமையக்கூடாது பொதுவாகவே கல்வி முறையில் செய்யப்படும் மாறுதல் எதுவும் வெகுவாக யோசித்துச் செய்யப்பட வேண்டியதாகும்.

நவீன காலத்தில் மண்பானை போய் பித்தளை, அலுமினியம் என்று பொருட்கள் மாறிமாறி வருவதைப்போல ஒவ்வொரு துறையிலும் நவீன கால மாற்றங்கள் தேவை என்பதும் உணரப்பட வேண்டியதாகும், கால மாற்றத்திற்கேற்ப சமுதாயம் தன்னை மாற்றியமைத்துக் கொள்கிற ஆற்றலையும் அறிவையும் பெறவேண்டுவது இன்றியமையாததாகும்: அந்தப் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்றால் மிகையல்ல.

கைத்தறி
ஆடையையே
அணியுங்கள்

ஆச்சாரியாரைக் கிண்டல் செய்கின்றனர்!

●

தோழர். ராஜகோபாலாச்சாரியார்
சென்னை.

அன்புடையீர், நலம் வேண்டுகிறேன். தங்களின் பஜனை—பிரார்த்தனை சீஸன் எப்படி யிருக்கிறது? ஏனெனில் சில நாட்களாகத் தங்களின் பக்திப் பிரசாரம் குறைந்திருப்பதாகத் தியாகராய நகர் குருவி ஒன்று கூறுகிறது. ஆதலால்தான் இந்த ஐயப்பாடு எனக்கு.

அதுமட்டுமல்லாமல், சென்னை சட்டசபைக் கூட்டத்திலேயும் தங்களின் பக்தி—பிரார்த்தனைகளை வெளிப்படையாகக் கிண்டல் செய்து பேசுகின்றனர்! நீங்கள் நம்பியுள்ள ஆண்டவனுக்காவது இதுகுறித்துக் கோபம் வரவேண்டாமா? அந்த ஆண்டவனும் கேலி பேசுவோருக்குத் துணைபுரிகிருரோ அறியேன்!

கடல் அரிப்பினல் தனுஷ்கோடியே மறைந்துவிடும் நிலையிலிருப்பதால் இதைத் தடுக்க பாதுகாப்புச் சுவர் எழுப்பப்படுமா? என்று 16—2—55 சட்டசபைக் கூட்டத்தில் கேள்விகள் கேட்கப்பட்டன. தோழர். வி. ஆர். நாகராசன் என்ற உறுப்பினர் பேசுகையில், **கடல் அரிப்பை மனிதப் பிரயத்தனத்தினல் தடுக்க முடியாதென்றும், ஆதலால் இந்த சபை உறுப்பினர்களும், மேல்சபை உறுப்பினர்களும் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு அக் கமிட்டி உபவாசமும் பிரார்த்தனையும் செய்யுமா? என்று ஒரு கேள்வியை எழுப்பினராம்!**

ஆச்சாரியார் அவர்களே, கேட்டீர்களா இந்த உறுப்பினரின் கிண்டலை. நீங்கள் விளம்பரப்படுத்தியிருக்கும் பஜனை-பிரார்த்தனை ஆகியவைகள் மழை பெய்வதற்கு மட்டுந்தானே! அதுவும் மழை அளவுக்கு மீறி பெய்து, புயல் வீசி கொடுமை விளைவித்தாலும் அதைத் தடுக்க உங்கள் பஜனை பிரார்த்தனையால் முடியாதல்லவா! அதாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே சக்தியை உங்கள் பக்தியில் சேர்த்திருக்கிறீர்கள்......?

இந்நிலையில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு பக்தி— பிரார்த்தனை — உபவாசம் இருந்தால்தான் முடியும் என்று கூறி அந்த உறுப்பினர் எவ்வளவு கேலி செய்கிருர் பார்த்தீர்களா? இதெல்லாம் பூர்வீக கர்மம்!

கூத்தரசன்

●

செஸ்டர் பவுல்ஸ்
(வழிநிலை) சென்னை

முன்னுள் அமெரிக்க தூதரே, வணக்கம், 16-2-55-ம் நாள் தாங்கள் சென்னை விமான நிலயத்தில் வந்திறங்கியதும் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்த விவரத்தைப் படித்தேன். தாங்களும் ஆச்சாரியாரை நையாண்டி செய்து பேசி யிருப்பதைத்தான் தங்கள் பேச்சில் காண முடிகிறது.

அணுகுண்டுகளை துருவக் கடலில் எறிந்துவிட வேண்டுமென்று ஆச்சாரியார் பேசியிருப்பதைப்பற்றித் தங்கள் அபிப்ராயம் என்னவென்று கேட்டதற்கு வேறு ஏதாவது பதில் சொல்லி விட்டுப் போகாமல் ஆச்சாரியாரின் முகத்தில் கரி பூசுகிறீரே இது நியாயமா?

"அணுகுண்டுகளைக் கடலில் எறிந்து விட வேண்டுமென்ற உபதேசத்தை ஆச்சாரியார் இன்றுதான் ஆரம்பித்திருக்கிருர். 1945-ம் ஆண்டிலேயே அமெரிக்கா அணுகுண்டு கட்டுப்பாட்டுக்கு முன் வந்திருக்கிறதே! அணுகுண்டுகளை அழித்துவிட வேண்டும், ஆயுத பலத்தை நம்பியிருக்கக்கூடாது என்ற பேச்சினை ஒவ்வொரு நாடும்தான் வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கிறது! இந்த வாய்ப்பேச்சுக்களை நம்பி அமெரிக்கா தனது ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்மென்று எதிர்பார்ப்பது ஒரு தந்தைமான பேச்சும் செயலுமாகும்" என்று சுடச்சுட "அக்கார வடிசில்" கொடுப்பதைப் போல ஆச்சாரியாருக்குப் பதில் கொடுத்திருக்கிறீர்!

மிஸ்டர் செஸ்டர் பவுல்ஸே! உமது பதிலில் காணப்படும் கருத்துக்களை அப்படியே யான் ஏற்றுக் கொள்ள இயலாதாயினும்—ஆட்சி பீடத்தில் அமர்ந்த வுடனே அரசியல் நீதியையும் மாற்றுக் கட்சிகளிடம் நடந்து கொள்ள வேண்டிய பண்பையும் அறவே மறந்து தமது ஜபர்தஸ்தை காட்டி வந்த இந்த ஆச்சாரியார்—அணுகுண்டுகளையும் அதற்கு அப்பன் குண்டுகளையும் கடலில் வீசி எறிந்துவிடுங்கள் என்று ஊருக்கு உபதேசம் செய்வது வெட்கக் கேடுதானே! எனவே அரசியல் உலகில் "வெட்டி வேதாந்தம்" பேசித்திரியும் ஆச்சாரியாருக்கு தாங்கள் அளித்த பதிலுக்கு மட்டும் உம்மைப் பாராட்டத்தான் வேண்டும்.

—கூத்தரசன்

●

பொதுப் பணியில் பலாத்காரமா?

கோவை பஞ்சாலைப் பகுதிகளில் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் 'திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்' ஏற்பட இருப்பது குறித்து பஞ்சாலைப் பகுதியிலே—குறிப்பாக தொழிற் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கட்சிகளிடையே ஒரு வித பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. அதன் எதிரொலி தாக்குதல் ரூபத்தில் கிளம்பியுள்ளது.

10—2—55-ந் தேதியன்று கோவை காளீஸ்வரா மில் கேட்டின் முன் காலை 8-மணிக்கு நமது திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழக முக்கிய ஊழியரான தோழர் ரங்கசாமி அவர்களை, கோவை மில் தொழிலாளர் சங்க (கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலுள்ள) ஊழியர்கள் நன்ருகத் தாக்கி இருக்கிருர்கள். சம்பள தினமான அன்று அச்சங்கத்திற்கு சந்தா கொடுக்காததே தாக்கியதற்குகாரணமாகும். இச்சம்பவம் அறிந்த நான் நேரில் சென்று இதுகுறித்து விசாரித்து, தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் அவர்களிடமும் கூறினேன். இச்சம்பவம் கோவையில் மூன்ருவது முறையாக நடைபெற்றிருப்பினும் கூட நாம் அமைதியாகவும்— கட்டுப்பாடாகவும் இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன். எனவே இக் காலித்தனமான செயலால் நம் வளர்ச்சியைத் தடைபடுத்த எண்ணினல் அதைவிட கீழ்த்தரமான எண்ணம் வேறு இருக்க முடியாது. இத்தகைய காரியங்களினுல் எங்கள் முயற்சி வளருமே யல்லாது வேறில்லை. இவ்வாறு நாம் கூறுவதைவிட, எதிர்காலமே இவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கும் என நான் நினைவூட்டுகிறேன்.

அன்பன், இரா. சுந்தரம்
அமைப்பாளர்

மந்திரம் தோற்றது - மதி வென்றது.

பேராவூரணிக்கு அடுத்த முடச்சிக்காடு கிராமத்தில் தி. மு. கழகத் தோழரான கோவிந்தசாமிக்கும், அவ்வூர் காந்தி சேவா சங்கத் தலைவரான தோழர் பெ. சுப்பையா என்பவருக்கும் ராமாயணத்தைப்பற்றி தர்க்க வாதம் நடக்கவே, தோழர் சுப்பையா ஆத்திரம் அடைந்து கழகத் தோழரை மந்திர சக்தியால் வாய் பேசாமலும், கைகால்கள் நடக்க முடியாமலும் 48 நாட்களுக்குள்ளாகச் செய்துவிடுகிறேன் என்று சபதம் செய்தார். பின்னர் கழகத் தோழர் கோவிந்தசாமி தோற்ருல் காங்கிரசில் சேர்ந்துகொண்டு தெய்வ வழிபாடு செய்வதாகவும் சுப்பையா தோற்ருல் தி. மு. க. வில் சேர்ந்து கொண்டு பணியாற்றுவதாகவும் இருவரும் பஞ்சாயத்தார் முன்னிலையில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர்.

குறிப்பிட்டபடி 48 நாட்கள் (13-2-55 மாலை 1-மணிக்கு) முடிந்து விட்டது. தோழர் கோவிந்தசாமியை மந்திர சக்தி ஒன்றும் செய்யாமையால் 49-வது நாள் முடச்சிக்காட்டில் **15-2-55**-ல் தோழர் வி. அருணசலம் அவர்கள் தலைமையில் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது.

ரெ. சுப்பையா, சு. சோமசுந்தரம், எம். கிருஷ்ணமூர்த்தி, சுந்தரம், பி. வடிவேல், கே. அடைக்கலம் ஆகிய தோழர்கள் மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்தும், மந்திரத்தின் மௌடீகத்தை விளக்கியும் சொற்பொழிவாற்றினுர்கள். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் கூடி விளக்க உரைகளைக் கேட்டனர்.

கர்னுடக தி. மு. க. மாநாட்டு முடிவுகள்

அனுதாபம்

திராவிட நாட்டுப் பிரிவினைக்கான அறப்போராட்டங்களில் கலந்து அரசியவாரின் அடக்குமுறைக்கு பலியான வீரர்களின் குடும்பத்தாருக்கு இம் மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. —தலைவர்

கண் துடைப்பு வித்தை

சோஷலிசம் 'மாதிரி' ஒரு சமுதாயத்தை நிறுவுவதுகான் காங்கிரசின் லட்சியம் என அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானமானது தொழிலாளர்—நடுத்தர மக்களிடையே உருவாகி வரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச் செய்ய வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்யும் கண் துடைப்புக் காரியம் என இம் மாநாடு பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

—ஈ. வி. கே. சம்பத், க. அன்பழகன்

திராவிடக் குடியரசு கூட்டாட்சி

வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட கன்னடம், ஆந்திரம், கேரளம், தமிழ்கம் ஆகிய நான்கும் மொழிவழி மாநிலங்களாக அமையப் பெற்று இனவழி அடிப்படையில் ஒன்றுபட்ட திராவிட சுதந்திர சமதர்ம குடியரசு கூட்டாட்சி நிறுவ கன்னட மக்கள் தங்களின் பேராதரவைத் தருமாறு இம் மாநாடு வேண்டிக் கொள்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்
—மு. க. வேந்தன்

வஞ்சகமே உருவானது

நீர்ப்பாசன திட்டங்கள், மின்சார வசதிகள், தொழில்துறை வளர்ச்சி ஆகிய அனைத்திலும் வடநாடு வளரவும் தென்னுடு புறக்கணிக்கப்படவுமான நிலைமையில் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தும், வகுத்துக் கொண்டுள்ள டெல்லி சர்க்காரின் போக்கினை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—கே. ஏ. மதியழகன்
—காஞ்சீபுரம் பெருமான்

கைத்தறி

கைத்தறித் தொழிலுக்கும் அத் தொழிலில் ஈடுபட்டுள்ள பாட்டாளி மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் கைத்தறி ஜவுளிக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்யுமாறு மைசூர் ராஜ்ய அரசினரை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—அ. பொன்னம்பலனுர்
—சென்னை வி. ராமசாமி

தொழில் உறவு

தொழில் கோர்ட் நடவடிக்கைகள் கூடிய சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டுமென்ற விதியிருந்தும் ஆண்டுக் கணக்காக பல தொழில் தகராறுகள் நீடித்துக்கொண்டு போவதைக் கண்டு இம் மாநாடு வருந்துவதுடன் இனியாகிலும் அவற்றை ஆறு மாதங்கட்குள் முடிக்க அந்த விதியை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தியசர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. —தலைவர்

தம் தாயகத்தை மீட்க விரும்புவோர் எவரும் ஆதிக்கக்காரர்களின் அகராதியில் தேசத் துரோகிகளாக - விரோதிகளாக ஆகத்தானே வேண்டும்

கர்னாடக தி. மு. க. அரசியல் மாநாட்டில் என். வி. நடராசன் தலைமையுரை

13-2-55-ம் நாள் நடைபெற்ற கர்னாடக தி. மு. க. அரசியல் மாநாட்டில் தலைமை வகித்த தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை.

*

"திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்று கூறுகிறது. தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாட்சி—குடியாட்சி வேண்டுமென்கிறது. இப்போது இந்த நான்கு மாநிலங்களும் வடவரின் பிடியில் சிக்கிச் சீரழிகின்றன. எதற்கெடுத்தாலும் டில்லியிடம் காவடி எடுக்கிற நிலை இருக்கிறது. வடவர்கள் தென்னாட்டு மக்களை அடிமைகளாக நினைக்கிறார்கள். தொழில் துறையில் அவர்கள் கொடிகட்டி ஆள்கிறார்கள். தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது. மொழித்துறையிலோ ஆங்கில மொழி இருந்த இடத்தில் இந்தி மொழியை புகுத்தி ஆதிக்கம் செலுத்துகிறார்கள்—என்ற நடைமுறை காரணங்களையும், திராவிடர்களின் சீரிய வரலாற்றையும் எடுத்துக் காட்டி திராவிடம் விடுதலை பெற வேண்டுமெனக் கோருகிறோம்.

நாங்கள் கூறுகிற காரணங்களைக் கேட்டுவிட்டு அவை நியாயமானவை தானா—எங்கள் கொள்கைகள் நாட்டுக்குத் தேவையானதுதானா என்று எண்ணிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வருமாறு முதலாவதாகத் தேசியத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இங்கிருந்து 50 மைலுக்கப்பால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அங்கு பேசிய காங்கிரஸ்காரர்கள், 'நாட்டு மக்களுக்கு அன்று தந்த வாக்குறுதிகளை செயல் முறையில் இந்த ஏழு ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் கொண்டு வரவில்லை; விவசாயிகளின் துயரத்தைத் துடைக்க காங்கிரஸ் ஏதும் செய்யவில்லை; நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் ஏதும் வழங்கக் காங்கிரஸ் முன்வரவில்லை; தொழிலாளர்தம் நலன் பேணப்படவில்லை' என பேசியிருக்கிறார்கள். இங்கு சற்று சிந்திக்க வேண்டுகிறேன்—மைசூர் மாநில காங்கிரஸ்காரர்கள், 'நடைபெறுகிற காங்கிரஸ் ஆட்சியால் கடந்த ஏழு ஆண்டுக் காலமாய் ஏதும் செய்ய இயலவில்லை' என்று பேசுகிறார்கள்—ஏன்? முதன் மந்திரியா யிருக்கிற அனுமந்தய்யாவை இதற்காகக் குறைகூற முடியுமா!

இதேபோன்ற நிலைதான், தென்னாட்டில் உள்ள இதர மாநிலங்களிலும் நிலவுகிறது. இதற்குக் காரணம் என்ன? நிலச் சீர்திருத்தத்தையோ, அல்லது தொழிலாள, விவசாயப்பெருமக்களுக்கு நன்மை செய்கிற காரியங்களையும் இங்குள்ள அனுமந்தய்யாவோ, காமராசரோ, பிரகாசமோ செய்ய முடியாது. இவர்களை எல்லாம் சேர்த்து ஆள்கிற டில்லி அரசாங்கத்தால்தான் அதைச் செய்ய முடியும்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் மைசூர் சுதந்திரமான மாநிலம் என்று எப்படிச் சொல்ல முடியும்? தென்னாட்டில் உள்ள நான்கு மாநில முதன் மந்திரிகளுக்கும் முக்கிய அதிகாரம் இல்லையே—தங்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்கு!

சுதந்திரம் வேண்டுமென்று செக்கிழுத்துச் செத்தாரே—வ. உ. சிதம்பரனார் இந்த மாதிரியான—மக்களுக்கு ஏதும் செய்வதற்கு அதிகாரமற்ற நிலையில் உள்ள ஒரு சுதந்திரத்திற்காகவா அவர் இப்படி படாதபாடெல்லாம் பட்டு வெள்ளையரை எதிர்த்து கப்பலோட்டி அடக்குமுறைக்கு ஆளாகி செத்து மடிந்தார்! அவரை ஒத்த இன்னும் எத்தனையோ பேர் தியாகங்கள் புரிந்தது இதற்குத்தானா,

மைசூர் காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் அரசாங்கம் ஏழாண்டுக் காலத்தில் ஏழைகளுக்கு ஏதும் செய்யவில்லை; இங்குள்ள மந்திரி சபையால் எதுவும் செய்ய முடியவில்லை, என்று உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிந்திக்க வேண்டும் ஏன் இந்த நிலை என்பதை!

மைசூர் காங்கிரஸ்காரர்கள் ஏன் இந்த நிலை என்பதை வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள் — சொல்ல முடியாது கட்சிக் கட்டுப்பாடு காரணமாக. ஆனால் நாங்கள் கூறுகிறோம் பகிரங்கமாக—இந்த நிலைக்குக் காரணம் டெல்லியின் ஆதிக்கம்தான், என்று!

மைசூரில் சந்தனக் காடுகள் ஏராளமாக உண்டு வேறெங்கும் இல்லாத இந்தச் சிறந்த மரங்களையோ அல்லது அதிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்களையோ இங்குள்ள மாநில அரசாங்கம் வர்த்தகம் செய்வதற்காக அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள முடியுமா? காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு நடைபெறுகிறது லண்டனில். அந்த மாநாட்டில், நமது காலடியில் கிடக்கும் இலங்கையும், இரு கூறாகப் பிரிந்து கிடக்கும் பாக்கிஸ்தானும் கலந்து கொள்கின்றனவே. ஏன் இங்குள்ள தென்னாட்டவர் அதில் பங்கு பெற முடியவில்லை! அவை இரண்டும் தனி நாடுகள் என்ற பெருமையை பெற்றிருக்கின்றன. நமது திராவிடம் வடநாட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது. —அதுதானே காரணம்!

நேற்றுவரை இந்தியாவுடன் ஒட்டிக் கொண்டிருந்த இலங்கையும் பாக்கிஸ்தானும் இன்று சர்வ சுதந்திர நாடுகளாய் வாழ்கின்றனவே! ஆனால் மைசூர் உள்ளிட்ட திராவிடம் மட்டும் இங்கு கிடைக்கும் சந்தனப் பொருள்களையும் இன்னும் மற்ற வளப்பங்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்ப அதன்மூலம் வர்த்தகத்தைப் பெருக்க டில்லியின் தயவை நாடிக் கிடப்பானேன்?

இதைப்போலவேதான் ஆந்திர மக்களும் கேரள, தமிழக மக்களும் உரிமை இழந்து வடநாட்டவருக்கு அடிமைகளாய் வாழ்கின்றனர்.

மைசூர் முதன் மந்திரி அனுமந்தய்யா அவர்கள் சென்னை சமஸ்கிருத கல்லூரி ஆண்டு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தார். அப்போது அவரிடம் சமஸ்கிருதம் முதல் மொழியாய்—ஆட்சி மொழியாய் வந்தால் இந்தியாவின் மொழிப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று மத்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு பேசியதை நிருபர்கள் சுட்டிக்காட்டி அவரது கருத்தைக் கேட்டனர். அனுமந்தய்யாவுக்கு ஆச்சாரியார் குரு. அந்த குருவின் முன்னிலையிலேயே அனுமந்தய்யா கூறினார்,—மக்களுக்கு தெரியாத ஒரு மொழி மக்களாட்சி மொழியாக இருக்க முடியாது மக்களால் புரிந்து கொள்ளக்கூடிய—மக்களுக்குத் தெரிந்த மொழிதான் மக்கள் ஆட்சி மொழியாக இருக்க முடியும், என்று கூறினார்.

அடுத்து இந்தி-இந்தியாவின் பொது மொழியாக வேண்டும் என்று பேசுகிறார்களே? என்று அவரிடம் கூறப்பட்டபோது அனுமந்தய்யா, இந்தி, இலக்கிய வளமற்றது. இந்தியாவின் பொது மொழியாகவும் வாய்க்கற்றது. என்று இடிமுழக்கமிட்டார்.

இந்தி மொழி நம்மீது திணிக்கப்படக் கூடாது—என்ற பிரச்னைக்காக தமிழகத்திலே தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதைப் போலவே ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளிலும் இந்த மொழிப் பிரச்னை வலுவடைந்து வருகிறது

இந்த மாநில முதன் மந்திரி அனுமந்தய்யா ஒரு முறை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பண்டித நேருவின் தலைமையில் நடைபெற்ற போது கூறியிருக்கிறார்,—எங்களை எல்லாம் அதிகப்பிரசங்கிகள் என்று நினைத்தாலும் சரி இந்தக் காரியக் கமிட்டி பண்டித நேருவால் நியமிக்கப்பட்டது. நியமனம் செய்யப்படாமல் தேர்தல் மூலம் காரியக் கமிட்டி அமைக்கப்பட்டால் அந்தக் கமிட்டி பண்டிதர் எதிர்பார்க்கிறபடி தனக்கு தலையாட்டுகிற கமிட்டியாய் இருக்காது. இப்போதிருக்கிற கமிட்டி பண்டித நேரு எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்கிற கமிட்டி, என்று முழங்கி யிருக்கிறார்.

இப்படி அவர் கூறியதைப் போலவே தான் தி. மு. கழகமும் கூறுகிறது. கூறுகிறது—வடநாட்டவர் தங்களுக்கு தங்கள் மக்களுக்கு தேவையானவற்றை மட்டும் செய்து கொள்கிறார்கள். தென்னாட்டை அலட்சியப்படுத்துகிறார்கள். எல்லாம் பண்டித நேரு வைத்த சட்டமாக இருக்கிறது—என்று! அதற்காக எங்களை தேசத்துரோகிகள் என்று கூறுவதா!

நாங்கள் கூறுவோம்—அனுமந்தய்யா போன்ற மான உணர்ச்சியுடையவர்கள் வடநாட்டவருக்கு என்று தேசத்துரோகிகளாகிறார்களோ அன்றுதான் இந்த தென்னாட்டிற்கு வாழ்வு கிடைக்க வழி பிறக்கும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் உச்சநிலையில் இருந்த சமயம் காந்தியடிகள் அந்த ஏகாதிபத்திய ஆட்சி முறையை எதிர்த்துக் கூறியதை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"பிரிட்டிஷ் ஆட்சியாளரே, எங்கள் நாட்டின் உரிமையைப் பறித்து வளப்பத்தையும் சுரண்டுவதோடல்லாமல், இந்திய மக்களை அடிமைகளாகக் கருதிவரும் உங்களின் ஆதிக்க எண்ணத்தை கண்டு வருந்துகிறேன். இந்தப் போக்கினை நீங்கள் திருத்திக் கொள்ளாவிடில் எங்கள் போராட்டத்தை தீவிரமாக்கநேரிடும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடக்குமுறைகள் மிகக் கடுமையானது என்பதையும் நானறிவேன். ஆனால் இதோ என் இரு பக்கமும் வீற்றிருக்கும் சிங்கங்களின் துணையானது உங்களின் ஏகாதிபத்திய அடக்குமுறைகளை தகர்த்தெறியும் என்ற முழு நம்பிக்கை எனக்கிருக்கிறது."

என்று எச்சரித்தார், அந்த இரு சிங்கங்கள் யார்? மாவீரர்களான மவுலானா மகமத் அலி—மவுலானா ஷவுகத் அலி ஆகியவர்கள்தான் இந்திய விடுதலைப் போரில் இவர்களின் தொண்டு ஈடுஇணையற்றதாகும். இதனை நான் நினைவூட்டுவதைவிட தேசியப் போராட்டத்தைப் புரட்டிப் பார்த்தால் மேலும் விளக்கம் பெறக்கூடும்.

இதை ஏன்குறிப்பிடுகிறேன் என்றால் காந்தியடிகளால் போற்றப்பட்ட இரு மாபெரும் தேசியத் தலைவர்களான அலி சகோதரர்களின் இறுதிக் காலம் எப்படி முடிந்தது தெரியுமா!

அவர்கள் தேசத் துரோகிகள் என்று அதே காங்கிரஸ் தலைவர்களால், காங்கிரஸ் முகாமிகளால் தூற்றப்பட்டனர்! ஏன்—அவர்கள் செய்த துரோகம் என்ன? தங்கள் இனமக்களைப் பற்றியும் அவர்கள் பெரும் பகுதியாக வாழும் நாட்டைப் பற்றியும் அக்கறை கொண்டதுதான்! இதனை திராவிடத்திலுள்ள தேசியத் தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

பெரியார் அவர்கள் — தேசியத் தலைவரா யிருந்தவர். காங்கிரசின் வளர்ச்சிக்கு இணையற்ற தியாகம் செய்தவர். தேச பக்தர் என்று போற்றப்பட்டவர்; ஆனால்இன்று அவர் தேசத் துரோகி!

கண்ணீர் விட்டுக் காங்கிரசை வளர்த்த தமிழ்ப் பெரியார் **திரு. வி. க. அவர்கள்** காங்கிரசின் விரோதியென்ற பெயருடனேயே மறைந்தார்! கப்பலோட்டிய வீரத் தமிழன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் தன்மையைத் தட்டிக் கேட்ட செயல்வீரர்—காங்கிரசே தனது மூச்சு என்று பணியாற்றிய **வ. உ. சி. அவர்கள்**—அந்த உத்தமர் தமது இறுதி நாளிலே காங்கிரசுக்கு எதிரி யென்று தூற்றப்பட்டார்!

சிந்தனைச் சிற்பி **சிங்காரவேலரும்** தேசிய கூடாரத்தின் பரம வைரி என்ற பெயருடனேயே தமது வாழ்நாளின் பிற்பகுதியை முடித்து மறைந்தார்!

ஏன் காலஞ் சென்ற திராவிடத் தலைவர்களான **சர். தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர், டாக்டர் சி. நடேசனார், ஓ. தணிகாசலம் செட்டியார்** போன்றவர்களும் தேசிய முகாமுக்குச் சென்று திரும்பியவர்கள்தான்! இன்னும் இதைப்போல ஏராளமான மேற்கோள்களைக் கூறமுடியும்.

எனவே மவுலானா மகமதியிலிருந்து—இக்கனை பேரும் காங்கிரஸ் பட்டியலில் தேசத் துரோகிகளாக மாறியதேன்! இங்கேதான் திராவிட தேசியத் தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தைப் புகழ்ந்துகொண்டு அவர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளும்வரை தேசபக்தர்கள்—தியாகிகள், தன் நாட்டைப்பற்றி சற்று கவலை கொண்டு பேசினாலோ உடனே தேசத் துரோகிகள்—அந்நியர்களுக்கு ஏஜெண்டுகள் என்ற வசை புராணம். தன் சொந்த நாட்டின் தன்மானத்தைக் காக்க விரும்பும் எவரும் இந்த துரோகப் பட்டத்திற்கு அஞ்சக் கூடாது. இன்னும் சொல்வேன்; அந்தப் பட்டத்தை மனதார வரவேற்கவும் வேண்டும்.

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்கப் பணியாற்றிய தேசியத் தலைவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பட்டியலில் துரோகிகள் என்றுதானே குறிப்பிடப்பட்டனர். அதுமட்டுமா தேச ஒற்றுமையை கெடுப்பவர்கள் என்றும் பழி சுமத்தப்படவில்லையா!

12-ம் பக்கம்

சிறுகதை

பிரதமரின் தரிசனம்

டி. புருடோத்தமன், சென்னை.

பாரத கண்டம் (!) சுதந்திரம் பெற்ற பிறகு இந்நாட்டு மக்களுக்குக் கிடைத்த அதிகாரங்களில் — உரிமைகளில்—மிகப்பெரியது...மிகமிகப் பெரியது, தங்களுடைய சுயதேவைகளையும் சமூதாய தேவைகளையும் பற்றிய ஆட்சேபனைகளை...மந்திரியிடத்திலோ.. பிரதமரிடத்திலோ நேரடியாக எடுத்துக் கூறலாம் என்பதுதான்! இந்த அதிகாரத்தை முறைப்படி, தக்க சமயத்தில் பயன்படுத்த மக்கள் விழைவதுண்டு. தலைநகரங்களில் காலை முதல் மாலைவரை பலவித ஆடைகள் அணிந்தவர்கள்—விருதியாக கதருடை அணிந்தவர்கள்—மந்திரியுடைய, பிரதமருடைய அதிகார அட்டாரங்களில் கூட்டம் கூட்டமாக நிற்பது சகஜம்! மோட்டாரில் வருபவர்கள் சிலர், நடராஜா சர்விசில் வருபவர்களும் குறைவல்ல. ஓர் புண்ணியதரிசனம் என்று இதைக் கருதுபவர்களுக்கும் பஞ்சமில்லை!

அன்றும் பிரதமருடைய பிருந்தாவனம் இத்தகைய புண்ணியத்தல யாத்திரிகர்களால் நிரம்பி யிருந்தது. வழக்கம்போல பிரதமரின் அந்தரங்க காரியதரிசி பிரத்யட்சமானார்! நீண்டகாலமாக பிரதமரின் குணம், நடைமுறை இவைகளின் நிழலில் வளர்ந்ததால் அவருடைய சைதன்னியம் ஏறக்குறைய இவருக்கும் கிடைத்திருந்தது. அறையிலிருந்து அவருடைய அருள்வடிவம் வெளியிலே வந்ததும், அவருடைய திருக்கரம் தன்னுடைய வெள்ளைத் தலைப்பாகையை சரிப்படுத்த மேலே உயர்ந்தது! தன் முன்னால் காட்சி யளித்த மக்களின் திரளைக்கண்டு திகைத்தவரைப்போல் ஒரு நிமிடம் நின்றார். அங்கு குழுமி யிருந்தவர்களிடத்தில் அவர் வினவினார்.

நீங்கள்...நீங்கள் இப்படி வர ஆரம்பித்து விட்டால்! உங்களுக்குத் தெரியாதா பிரதமருக்கு இவ்வளவெல்லாம் ஓய்வு கிடையாதென்பது! எவ்வளவு பளுவான காரியங்கள் அவர் தன் தலைகளில் தாங்குகிறார் என்பதும் உங்களுக்குத் தெரியவில்லை. மிகமிகச் சாதாரணமான விஷயங்களுக்காகத்தான் அவருக்குத் தொல்லைதர நீங்கள் இங்கு வருகிறீர்கள். போதாக் குறைக்கு இன்று காபினெட் மீட்டிங்குகூட இருக்கிறதாள். அவர் அதற்காக இதோ...இப்பொழுதே போகப் போகிறார். உங்களால் அவரை இப்பொழுது பார்க்க முடியாது. முன்னாலேயே உத்தரவுபெற வேண்டும். நேரம் குறிப்பிடப்படவேண்டும் என்ற தெளிவு கூட உங்களுக்கு இல்லாமல் போயிற்றே!

இதற்கிடையில் சிறிதளவு விலைமதிக்கப்பெற்ற மூன்று பேர் பாக்கட்டிலிருந்து ஓர் காகிதமெடுத்துக் காண்பித்தார்கள். தரிசனத்திற்கு உத்திரவு கிடைத்த பிறகு வந்தவர்கள் நாங்கள் என்பதைக் காட்டிக் கொள்ள அவர்கள் விழைந்தனர்.

அதற்குள் மற்றொருவர் கரங்கள் குவித்துக் கருத்தறிவிக்கிறார்:—பிரதமரை ஒருமுறை காண்பதற்கு நேரம் குறிப்பிட்டுக் கிடைப்பதற்காக மூன்று நாட்களாக நான் திண்டாடுகிறேன். யாரும் கேட்டபாடில்லை.

எனக்கு ஒரு வார்த்தை மட்டும்தான் சொல்வதற்குண்டு—வேறொருவர்!

எங்களுக்கு ஒருமுறை பார்த்து விட்டால் போதும்...ஒரு கூட்டம் மக்கள் கூக்குரலெழுப்பினர்.

கூட்டத்தில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு கலவரம் கிளம்பியது.

பஞ்சத்தால் பட்டினி கிடந்து பல பேர் இறக்கப் போகிறார்கள்...

அதற்குள் மற்றொரு அபேட்சை கிளம்பியது:—

டெப்யூடிசம் மிஷினரின் துரோகத்தால்...

தப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து பேர்...

அந்தரங்க காரியதரிசியின் பாடு சங்கடமாகி விட்டது. என்ன சொல்வதென்று தெரியாமல் அவர் கோபத்துக்காளானார்.

நீங்கள் பேசாமல் இருங்கள். உங்களுக்குப் பிரதமரை பார்க்க வேண்டுமானால் வரிசையாக நில்லுங்கள். காபினெட் மீட்டிங்கிற்குச் செல்லும் பொழுது அவர் இந்தப் பக்கம் வந்தாலும் வருவார். பார்க்க வேண்டுமானால் இங்கேயே இருங்கள். ஆனால் ஒன்றுமட்டும் நினைவிலிருக்கட்டும். ஒருவார்த்தை கூட வெளியே கேட்கக் கூடாது. பார்க்கலாம் அவ்வளவுதான்,

கூட்டத்தில் ஒருவர் ஓர் காகிதத்தை எடுத்துக் காண்பித்துக் கொண்டு கூறினார்.— 'இப்பொழுது வருவதற்குத்தான் என்னிடம் கூறப்பட்டிருக்கிறது'

'பேசாமல் இரய்யா' காரியதரிசி சீறினார், அந்த மனிதனிடத்தில் அங்கே உட்காருவதற்கு அவர் சாடை காண்பித்தார்.

என்னுடைய விஷயம் பிரதமரிடம் சிக்கி நீண்ட நாட்களாகி விட்டது. இந்தக் காகிதம் அவரிடம் தர வேண்டும் அவ்வளவுதான்...அந்த மனிதன் விட்டபாடில்லை.

அந்தரங்க காரியதரிசிக்கும் அதைப் பற்றி சிலதெல்லாம் தெரியும். உங்களுடைய விஷயம் பிரதமர் ஆலோசித்திருக்கிறார். விஷயம் சரியாகிவிடுமென்று நீங்கள் நம்பலாம். ஆனால் இப்பொழுது அதைப்பற்றி ஒன்றும் பேசமுடியாது. அவருக்கு நிறைய வேலைகளுண்டு. காரியதரிசி இவ்வளவு விஷயமும் அவரிடம் கூறினார். மற்றவர்களைப் பார்த்து மேலும் ஒருமுறை அவர் கர்ஜித்தார்.

ஒரு நிமிடத்தில் பிரதமர் வந்துவிடுவார். யாரும் ஒன்றும் பேசக்கூடாது. தன்னுடைய கடமை முடித்துக் கொண்டு அவர் உள்ளே சென்றார்.

நீண்ட நேரமாக வரவில்லை பிரதமர். வெள்ளை தலைப்பாகை அணிந்துக் கொண்டு வணங்கிய கைகளுடன் மந்தகாச வதனத்துடன்—காரியதரிசிஉடன் வர தரிசனம் தந்தார். அவருடைய வலது கையில் ஒரு கத்தை காகிதமிருந்தது. ஓர் வாலிபன் முடுக்குடன் வேகமாக நடந்து வந்த அவன் இன்னும் ஒருமுறை மக்களைப் பார்த்து புன்சிரிப்பு மழை பொழிந்தான். திரும்பவும் அவர்களை வணங்கிவிட்டு தன்னுடைய மோட்டாரைப் பார்த்து ஓடினார்.

கூடியிருந்தவர்களும் வணங்கினார்கள். சில பேர் உதட்டை அசைத்தனர். காரியதரிசியின் எச்சரிக்கை நினைவுபடுத்திக் கொண்டு அவர்கள் பேசாமல் இருந்தனர்.

ஒருவருக்கு மட்டும் செயலற்றிருக்க முடியவில்லை. அவர் தன் கையிலிருந்த காகிதத்தை நீட்டிக்கொண்டே பேசினார்.

நான் இந்தக் காகிதம்......

பிரதமர் கோபாவேசத்துடன் அவரை நெருங்கினார்,

பேசாமல் இருங்கள். இதென்ன கூத்து! அவர் கத்தினார்'

நான்...நான்... பார்க்க வந்தவர் நடுக்கமுற்றார்.

என்ன போக்கிரித்தனம்! நான்... நான்...சொல்கிறேன்...நீங்கள் பேசாமலிருங்கள். பிரதமர் கோபத்தணலில் தகித்துக் கொண்டிருந்தார்.

நாட்டிற்குச் செய்ய வேண்டிய எவ்வளவு பெரிய பெரிய வேலைகள் உண்டு! அதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? நீங்களெல்லாம் இவ்வளவு சாதாரண விஷயங்களுக்காக இங்கு ஏன் வருகிறீர்கள்? கைகளைச் சுருட்டிக் கொண்டுதான் இவ்வளவையும் அவர் சொல்லி முடித்தார்.

தயவு செய்து......

மன்னிப்புக் கேட்டுவிட்டு திரும்பவும் அந்த மனிதர் காகிதத்தை அவரிடம் நீட்டுவதற்கு முயற்சித்தார்.

பிரதமர் தன்னுடைய கையிலிருந்த காகிதத்தை கீழே ஓங்கி அடித்துவிட்டு வந்தவரின் கையிலிருந்த காகிதத்தைப் பறித்தெடுத்து அவருடைய தோளில் இரண்டு கைகளையும் அழுத்தி வைத்துவிட்டு சமாதானப் படுத்த முயன்றார். நான் சொல்கிறேன் நீங்கள் பேசாமலிருங்கள். என்றுதான் நீங்களெல்லாம் மரியாதை கற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?

பார்க்க வந்தவர் விறைத்து நின்றுவிட்டார். அவரைச் சமாதானப்படுத்த முடிந்ததில் மகிழ்ச்சி யடைந்தவர் போல் பிரதமர் தன்னுடைய காரியதரிசியின் உதவியுடன் வீசியெறிந்த காகிதங்கள் திரும்பப்பெற்று தன்னுடைய காரை நோக்கி விரைந்தார்.

காரியதரிசியின் கண்களைத் திரும்பவும் கோபத்தால் கலங்கச் செய்துக் கொண்டு அந்த மனிதர் பிரதமரை நெருங்கினார். பற்களைக் கடித்துக் கொண்டு அவர் சினந்தார்:—ஏனய்யா, உம்மிடம் எவ்வளவு முறை சொல்லியாயிற்று திரும்பவும் மரியாதை யில்லாமல்...மோட்டார் சீக்கிரத்தில் இடம் பெயர்ந்தது.

கையில் வைத்திருந்த காகிதத்தை அவரிடம் தந்து மன்னிப்புக் கேட்க அந்தப் பார்வையாளர் முயன்றார். ஏதோ சொல்வதற்கு ஆரம்பிப்பதற்கு முன் அந்தரங்க காரியதரிசி அவரைக் கைகளால் அப்புறப்படுத்தினார்.

அதில்லை......நான் சொல்வதைக் கேளுங்கள். பிரதமர் தன் கையில் வைத்திருந்த காகிதத்தை என்னிடம் தந்துவிட்டு என்னுடைய காகிதத்தை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார். பார்வையாளர் மிகமிக வணக்கத்துடன் தெரிவித்தார்.

உண்மையிது அவர் கோபித்துக் கொண்டிருப்பார், காரெங்கே? சீக்கிரத்தில் வேறொரு கார்...காரியதரிசி தன்னிடம் நின்று கொண்டிருந்த ஓர் பியூனிடம் கட்டளையிட்டார்.

அபேட்சகரின் கையிலிருந்து அந்தக் காகிதத்தைப் பெற்றுக் கொண்டு வேறொரு காரில் பிரதமர் சென்ற இடம் நோக்கி காரியதரிசியும் விரைந்தார்.

மக்கள் வாழ்வு சிறக்க மனவளம் தேவை!

கர்னாடக சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர். ப. உ. ச. திறப்புரை

12-2-55-ம் நாள் பெங்களூரில் நடைபெற்ற கர்னாடக தி. மு. க. சமூக சீர்திருத்த மாநாட்டைத் துவக்கி வைத்து தோழர் ப: உ. சண்முகம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு:—

“பழைமை குடிகொண்டுள்ள ஊர் பெங்களூர் நகர். இங்கு புதுமை எண்ணங்கள் மக்களின் உள்ளங்களிலே மலரச் செய்வதற்காக, இந்த சமூக சீர்திருத்த மாநாடு நடத்தப்படுகிறது.

சீர்கெட்டுப் போயுள்ள இந்தச் சமூகத்தைப் பற்றி நம்மைத் தவிர—திராவிடரியக்கத்தைத் தவிர வேறு யாரும் கவலைப்படுவதில்லை. வேறு பல அரசியல் இயக்கங்களிலிருந்து நாம் பிரிவது இந்த இடத்திலிருந்துதான்.

நாம்— நமது திராவிடர் சமுதாயம் திருந்த வேண்டும் முன்னுக்கு வரவேண்டும். நாகரீகம் பெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

திராவிடர்களிடையே நிரம்பிக் கிடக்கிற குருட்டுப் பக்தியும், கடவுள் நம்பிக்கையும் மதவாதமும், பழமை எண்ணங்களும் மூடப்பழக்கங்களும் அகல வேண்டும், மக்கள் பகுத்தறிவு பெற்றவர்களாய், எதையும் சிந்தித்து செயல்படுபவர்களாய் இருக்க வேண்டும், என்று விழைகிறோம். இதற்காக—இந்தச் சீர்திருத்தத்தை மக்களிடையே மலரச் செய்வதற்காக—அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற கடவுளர்கள், அவர்களை அடையத்தோன்றியுள்ள மதங்கள் அவை கூறும் சடங்குகள் இவையெல்லாம் எப்படி அறிவுக்குப்புறம்பானவை —ஆபாசமானவை என்பதை எடுத்தியம்புகிறோம்.

இதைத் தவிர, மதவாதிகளையோ கடவுள் நம்பிக்கைக்காரர்களையோ மதகுருக்களையோ கிண்டல் செய்ய வேண்டும் என்பதல்ல நமது நோக்கம்:

மக்கள் சீரியதொரு வாழ்வு பெற அவர்கள் மனம் பக்குவப்பட்டதாக இருக்க வேண்டும். நல்ல நிலத்திலுங் கூட தேவையான விதைகளைத் தூவிப் பயிரிடுவதற்கு முன் நிலத்தைப் பண்படுத்துவதுபோல மக்களின் நல்வாழ்விற்கான அரசியல் பொருளாதார அமைப்பில் மாற்றங்கள் நிலைபெறச் செய்ய அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

மக்களின் உள்ளத்தைப் பண்படுத்துகிற வேலையை நாம் மேற்கொண்டுள்ள போது பலர் நம்மீது கோபமும் ஆத்திரமும் பல காரணங்களுக்காக கொள்வதைப் பார்க்கிறோம், அவற்றை நாம் பொருட்படுத்தாமலேயே தொடர்ந்து இப்பணியைச் செய்துவருகிறோம்.”

மதம் பழிக்கப்படுகிறது, ஆண்டவர்கள் இழித்துரைக்கப்படுகிறார்கள், ஆஸ்தீகம் அழிக்கப்படுகிறது—என்று கூச்சல் போடுபவர் இதென்ன பெரிய காரியம் என்று ஏளனம் செய்வோர் இது ஒன்றும் இப்போது தேவை இல்லை என்று அலட்சியப்படுத்துவோர் ஆகியோரெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருமுகமாக எதிர்த்தாலும் இடைவிடாது நாம் இந்தச் சீர்திருத்தப் பணியைச் செய்துவருகிறோம்.

நாட்டிலே கடவுளர்களின் பெயரால் மதங்களின் பெயரால் புகுத்தப்பட்டிருக்கிற புராண இதிகாச ஏடுகளிலிருந்து சில காதைகளை எடுத்துக்காட்டி அவை எத்துணை அநாகரீகமாய்யிருக்கிறதென்பதையும் சுட்டிக் காட்டினார், ப. உ. ச.

சமூகத்திலே ஏற்றத்தாழ்வுகளைப் போதிக்கும் வருணாச்சிரமதர்மம் நிலைக்க வேண்டுமென்பதற்காக எத்தனை புண்ணிய காதைகளில் அந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு நியாயம் கூறப்பட்டிருக்கின்றன என்றும் எடுத்தியம்பி அந்த ஏற்றத்தாழ்வுகள் இன்று போகவேண்டுமானால் அந்தப் புராண இதிகாச போதனைகள் மக்களிடையே யிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும், பல கடவுள்கள், மதம் ஆகியவை ஒரு சிலரின் ஏமாற்றுவித்தை என்றும் விளக்கி சீர்திருத்தப்பணி எவ்வளவு தூரம் இந்தச் சமூகத்திற்கு தேவையானது என்பதை விளக்கமாகப் பேசினார் ப. உ: சண்முகம்,

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

4.

இந்தியா ஒரே நாடாக இருந்தால் இத்தகைய ஓரவஞ்சனையும், பாதகச் செயலும் நடக்குமா? எனவே, நாம் வேண்டுமென்றே பேசுகிறார்கள்—வேண்டுமென்றே செய்கிறார்கள் என்கிறோம். ஏகஇந்தியா புரட்டர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது என்று கருதுகிறோம்.

இந்தியா என்பது ஒரு நாடா? நாடு என்றால், அதற்குரிய இலக்கணம் என்ன? இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடையை திராவிட மக்கள் உணர்ந்தால்தான், ஏகாதிபத்தியப் பித்தர்களுக்கும், அரசியல் புரட்டர்களுக்கும், அரசியல் வாழ்வு மறையும்.

அகில இந்திய அரசியல் பேசுவோர் 'நாடு' என்பதற்கு என்ன விளக்கம் தருகிறார்கள்? அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லா விட்டாலும், அவர்களின் பேச்சுக்களிலும், செயல்களிலும் ஊடுருவி நிற்கும் கருத்து இதுதான்;—

"கடலால், மலையால், காடுகளால் பிரிக்கப்படாத ஒரே நிலப்பரப்பில் வாழ்கிற மக்கள் எல்லாரும் ஒரே நாட்டினர்" என்பதே.

ஒரே நிலப்பரப்பு என்கிற ஒன்று மட்டுமே நாடு என்பதற்கு இலக்கணமாகாது, பல்வேறு முக்கிய இலக்கணங்களில் இதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

ஒரே நிலப்பரப்புத் தத்துவத்தின்படி ஐரோப்பாவை ஆராய்ந்தால், அங்குள்ள, சில நாடுகளுக்குக் கூட தனியாக இருக்க உரிமை கிடையாது.

ஐரோப்பிய நாடுகள்

ஜெர்மனி, போலந்து, இரஷ்யா, பின்லந்து, இவற்றுக்கிடையில் கடலோ, மலையோ கிடையாது! ஸ்விடனும், நார்வேயும் ஒரே நிலப்பரப்பில்தான் இருக்கின்றன. ஜெர்மனி, டென்மார்க், ஹாலந்து, பெல்சியம், பிரான்சு உட்பட இயற்கை எல்லை எதுவும் இல்லாமல் ஒரே நிலப்பரப்பில்தான் இருக்கின்றன! ஹங்கேரி, ஆத்திரியா, செக்கோசுலேவேகியா ஆகிய இவை அனைத்தும் செர்மனியை யொட்டி ஒரே நிலப்பரப்பில்தான் இருக்கின்றன! இரஷ்யாவுக்கும், ருமேனியாவுக்கும் இடையில் எவ்வித இயற்கைத் தடையும் இல்லை! பால்கன் நாடுகளையும், ஸ்பெயின், போர்ச்சுக்கல் நாடுகளையும், பிரித்துக் காட்டக்கூடிய எல்லை எதுவும் இல்லை! வடஅமெரிக்காவின் பல நாடுகளும் இப்படித்தான் இருக்கின்றன. இவை யனைத்தையும் தனித்தனி நாடுகளாகவே, உலகமெல்லாம் ஒப்புக் கொண்டிருக்கின்றன!

ஒரே நிலப்பரப்பு வாதப்படி ஐரோப்பாவைத் திருத்தினால், டென்மார்க், ஹாலந்து, பெல்சியம், ஹங்கேரி, ஆத்திரியா, போலந்து இவைகளெல்லாம் செர்மனியுடன் சேர்ந்திருக்க வேண்டும்.

"இதுபோலவே ருமேனியா, பின்லந்து இவையெல்லாம் ரஷ்யாவுடன் சேர்ந்திருக்க வேண்டும். போர்ச்சுகல் தனது ஆண்மையை இழந்து ஸ்பெயினுக்கு வாழ்க்கைப் பட வேண்டும்"

இப்படிச் சேரவேண்டும் என்கிற வாதத்துடன் சேர்ந்ததுதான், ஏக இந்தியா நிலப்பரப்பு வாதம்!

இந்த வாதத்தை எவனாவது ஐரோப்பாவில் மேலே கண்ட நாடுகளுக்கிடையில் கூறினால், அப்படிக் கூறியவன் பைத்தியக்காரனாகக் கருதப்படுவான்!

இங்கு இப்படிப் பேசுவோர் அறிவாளிகளாக மதிக்கப்படுகின்றனர்! அரசியல் தலைவர்களாகப் போற்றப்படுகின்றனர். நூதனமான நிலை!

ஐரோப்பா பல நாடுகளாக இருப்பது ஏன்? வட அமெரிக்காவில் பல நாடுகள் இருக்கக் காரணம் என்ன? முன் காலத்தில் இந்தியா சிறு சிறு பகுதிகளாக இருந்தது எதனால்? இவைகளுக்கு சரியான விடை காண்பதுதான் நமது நோக்கம். அவைகளை விரிவாக ஆராய்வோம்.

சமுதாயம்

நாடு என்பதும். சமுதாயம் என்பதும் தேசிய இனம் என்பதும் ஒரு பொருட் சொற்கள் என்று ஏற்கனவே கூறினோம்.

இப்போது நாடு அல்லது சமுதாயம் என்கிற பாகுபாடு எப்படி ஏற்படுகிறது என்பதை விளக்க வேண்டும். அதற்கு முன்னால் சமூகம் என்பதைப் பற்றியும் விளக்க வேண்டும்.

சமூகம், சமுதாயம் இரண்டும் விளக்கப்பட்டால், நாடு என்றால் என்ன? என்பது தானாகவே விளங்கிவிடும்.

சமூகம், சமுதாயம் என்கிற இரண்டு சொற்களும், ஒரே அருத்தம் கொண்டவைகள் என்று பலர் கருதிக் கொண்டிருக்கின்றனர். அது மிகப் பெருந்தவறு;

பல சமூகங்களைக் கொண்டதே சமுதாயம் என்று பெயர் பெறும். அதாவது, சமுதாயத்திலிருந்து பிரிய முடியாதபடி பல இயற்கைப் பிடிப்புகளைக் கொண்ட உட்பிரிவுகளே சமூகங்களாகும்.

சமூகம் என்றால், தமிழகத்தில் அடிக்கடி நாம் கேள்விப்படுகிற முதலியார், மூப்பனார், நாடார், நாயக்கர், செட்டியார், ரெட்டியார் என்பன போன்ற சாதியல்ல! சமூகம் என்பது ஒரே பண்புடைய மக்களைக் குறிக்கும் சொல்லாகும்.

முதலியார், மூப்பனார், என்னும் சாதிகள் அறிவீனத்தால் ஏற்பட்ட கற்பனைப் பெயர்களே! அந்த மக்களிடையில் ஊடுருவி நிலவும் 'பண்பு' ஒரே வகையானதுதான்.

எனவே, அவர்கள் எல்லாரும் அரசியல் அகராதிப்படி ஒரே சமூகமே! இவை போகப் போக விளங்கும்.

இப்போது சமூகப் பண்பு என்று எதைக் கூறுகிறார்கள் என்பதை ஆராய்வோம்.

சமூகம்

1. பேசும் மொழி
2. உண்ணும் உணவு
3. உடுக்கும் உடை
4. மேனி நிறம்
5. உறுப்புகளின் அளவு
6. மனநம்பிக்கை
7. கடவுள் மதம்
8. நாட்டு வரலாறு
9. பரம்பரைக் கலைகள்
10. பொருளாதார நிலை.

ஆகிய இந்த பத்து அமைப்புகளையும், இவைகளைச் சார்ந்த நடைமுறைகளையும் சேர்த்து 'பண்பாடு' அல்லது 'கலாசாரம்' என்று ஒரே வார்த்தையில் கூறுவது வழக்கம்.

இந்தப் பண்பாடுதான் மனிதனுக்கு மனிதன் வேற்றுமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன!

இந்தப் பத்து அமைப்புகளும் ஒரே விதமாக அமைந்திருக்கிற மக்கள் ஒரு சமூகம் என்று கருதப்படுவர்.

இந்தப் பத்து அமைப்புகளில் இரண்டொன்றில் வேறுபாடோ, முரண்பாடோ கொண்டவர்கள் இன்னொரு சமூகம் என்று கருதப்படுவர்.

ஆனால், முதலில் குறிப்பிட்ட பத்து அமைப்புகளும் ஒரே விதமாகக் கொண்டவர்களும், இரண்டாவது குறிப்பிட்ட சிற்சில வேறுபாடு அல்லது முரண்பாடுகளைக் கொண்டவர்களும், ஒரே சமுதாயத்தினர் அல்லது ஒரே நாட்டினர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலே கண்ட பத்து அமைப்புகளில் முற்றிலும் வேறுபாடோ, அல்லது, முரண்பாடோ கொண்டவர்களாக இருந்தாலும் அல்லது பலவற்றில் வேறுபாடோ அல்லது முரண்பாடோ கொண்டவர்களாகி, இரண்டொன்றில் மட்டும் ஒற்றுமையுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் யாவரும், வேறு நாட்டினர் அல்லது வேறு சமுதாயத்தினர் என்றே கருதப்படுவர்.

வேறுபாடு, முரண்பாடு என்னும் சொற்களை நாம் இங்கு என்ன பொருளில் சொல்கிறோம் என்றால், ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாதவைகளை வேறுபாடு என்றும், ஒன்றுக்கொன்று மோதிக் கொள்பவைகளை முரண்பாடு என்றும் சொல்கிறோம்.

வேறு நாட்டினர் வேறு சமுதாயத்தினர் என்பவைகளை, நாம் இங்கு என்ன பொருளில் கூறுகிறோம் என்றால், வேறு நாட்டு பிரஜையாக இருந்து, ஏதாவது காரணத்தினால் மற்றோர் நாட்டில் குடியிருப்பவர்களை, வேறு நாட்டினர் என்கிறோம். உள்நாட்டுப் பிரஜையாக இருந்தும் வேறு நாட்டுக் கலாசாரத்தில் இருப்பவர்களை வேறு சமுதாயத்தினர் என்கிறோம்.

ஏனெனில், அத்தகைய வேறு சமுதாயத்தினர் நிச்சயம் சிறுபான்மையாகவும், தாங்கள் வாழுமிடத்தையே தாயகமாகக் கொண்டவர்களாகவும், இருப்பார்கள். அவர்களை வேற்று நாட்டினர் என்று கருத இடமில்லை. ஆதலால் வேறு சமுதாயத்தினர் என்று குறிப்பிடுகிறோம். இதற்கு உதாரணமாகத் தென்னிந்தியக் குடிகளான ஆங்கிலோ இந்தியர்களைக் குறிப்பிடலாம்.

இரண்டொரு விதங்களில் ஒற்றுமையுள்ளவர்களை ஏன் வேறு சமுதாயமாகவோ வேறு நாட்டினராகவோ குறிப்பிட வேண்டும்? என்று கேட்கலாம். அதனை விளக்குவோம்.

பெரும்பாலான வேறுபாடு அல்லது முரண்பாடுகளைக் கொண்ட மக்கள், ஒருவரை யொருவர் அந்நியராகவே கருதுகிறார்கள்! அப்படிக் கருதுவது இயற்கையே! அந்த எண்ணத்தை மாற்றவும் முடியாது! நிர்ப்பந்தம் காரணமாக அந்த வேற்றுமை எண்ணங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம்—ஒழியாது! சந்தர்ப்பம் நேர்ந்தபோது, வேற்றுமை கிளம்பியே தீரும். நவகாளிப் படுகொலைகளே, இதற்கு நல்ல சான்றாகும்!

பிரிட்டனுடைய அதிகார நிர்ப்பந்தம் இருந்தவரை, நவகாளிகள் மறைந்திருந்தன. அந்த நிர்ப்பந்தம் நீங்கிய உடனே நவகாளி நர்த்தனமாடத் தொடங்கியது.

இத்தனை வேற்றுமைக்கும் காரணமான பத்து அமைப்புகளையும் தனித்தனியாக விவரிப்போம். —(தொடரும்)

தொழிற் சங்கத் துறையில் தி. மு. க.

பிளவு படுத்துவது யார்? எது பிற்போக்குத்தனம்?

உலக அரங்கில் அதனைச் சார்ந்த நாடுகள் பலவும் தத்தம் உயர்ந்த கொள்கைகளை—திட்டங்களை வகுத்து சிறந்த முறையில் முன்னேறுகின்றன.

பெரும் மழையினாலும் புயலாலும் பூகம்பத்தினாலும், குமுறும் எரிமலையினாலும் நாசமாக்கப்படும் சில பிற்பட்ட நாடுகள் கூட சமீபகாலமாக மாற்றார் வியக்கும் வண்ணம் முன்னேறிச் செல்கின்றன—என்ற செய்தியை நாம் செய்தித்தாளின் வாயிலாக அறிகிறோம்

அவர்கள் உள்ளத்திலும் தன்னுடு என்ற உணர்வு ஏற்பட்டு அதன் செல்வ நிலையடைவதற்கும்—அவர்கள் சுபீட்சமாக வாழ்வதற்கும் அந்த மக்களும்—அவர்களைச் சார்ந்த இயக்கங்களும் செயல்பட்டு வருவது ஆச்சரியப்படும் செய்தியல்லதான் எனினும் அடிமைப் படுத்தப்பட்டு இருக்கும் நம்மக்களுக்கு அறிவூட்டும் செய்தியாகும். பசி—பஞ்சம்—பட்டினி — பட்டினிச்சாவு—கஞ்சித்தொட்டி என்பன போன்ற கூக்குரல்கள் எழுவது பாலைவனத்தையே நம்பி வாழ்கின்ற மக்களிடத்திலிருந்து எழும் குரல் அல்ல.

குமுறும் எரிமலைகள் தீக்குழம்பைக் கக்க, கடல் அலைகள் சீறிபாய, சுழன்றடிக்கும் சூறாவளி தன் கோர உருவத்தைக் காட்ட, லட்சோப லட்ச மக்களை தன் கோர வாயில் தள்ளும் பூகம்பம் ஏற்பட, கண் உறங்கும் நேரத்திலே கட்டுமீறி கரையுடைத்து நல்லோர், கெட்டோர், சிறுவர், சிறுமியர் என்று பாராது அத்தனையும் அழித்தொழுக்கும் ஆற்று வெள்ளம்—இவைகளில் இடையே வாழும் நாட்டிலிருந்து வரும் கூக்குரல் அல்ல.

அகிலும் தேக்கும் அழியாக் குன்றும்
அழகாய் மூத்து குவியும் கடல்கள்
முகிலும் செந்நெல்லும் முழங்கும் [நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு

என்று கூறும் வற்றாத நதிகளும், வளமிகுந்த வயல்களும் நெஞ்சை அள்ளும் தஞ்சை தரணிகள் பலகொண்ட வளநாடு. பாவலரும், நாவலரும், புலவர் பெருமக்களும் வாழ்ந்த நாடு. விருந்தினரைவரவேற்று அவ்விருந்தினர்களுக்கு நலம் செய்து, இடம் கொடுத்து வாழவிட்ட திருநாடு. அந்நாட்டிலேதான் எங்குநோக்கினும் பசி, பட்டினி. இவை பத்திரிகைச் செய்தியல்ல—கண்முன்னே காணும் காட்சி.

வறுமைக்குக் காரணம்?

வானத்திலே முழு நிலவு. ஆனால் ஒளியில்லை என்றால்; குப்பை மேட்டிலே மாணிக்கம். ஆனால் பிரகாசிக்கவில்லை என்றால் என்ன பொருள். நிலவிலே ஒளியில்லை. மாணிக்கத்திலே பிரகாசம் இல்லை என்று பொருள். நிலவை மறைக்கும் கார்மேகத்தை ஓட்டியாக வேண்டும், குப்பையிலே இருக்கும் மாணிக்கத்தை குடியிருக்கும் பனிமனைக்கு கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான் அதன் பயனை நாம் உணர முடியும். அதுபோல தான். செல்வமுள்ள நாட்டில் உண்ண உணவில்லை! உடுக்க உடையில்லை என்றால் காரணம் என்ன? உழைப்பிலோ குறைவில்லை. இரவு-பகலாய் மாடென உழைக்கிறோம். ஆனால் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லை. ஏற்றம் பிடித்து ஏர் உழுவோர்-பஞ்சாலையிலே உழல்வோர்-வண்டியிழுப்போர் மூட்டை சுமப்போர் இன்ன பிற வேலை செய்வோர்-இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தும் வறுமையிலே வாட்டப்படுகிறார்கள் என்றால் அதன் மூலகாரணம் யார்? பொதுவாக ஒரு நாடு வறுமையில் சிக்கியிருக்கிறது என்றால்,

1. அந்நியர் ஆதிக்கத்தில் அடிமைப் படுத்தபட்டு இருக்கும்.

2 அந்நிய மூலதனங்கள் அதிகமாகப் போட்டு சுரண்டப்படும்.

3 உள்நாட்டுப் பெரும் பணமூட்டை முதலாளிகள் நிலப்பிரபுத்துவத் திமிங்கிலங்கள்—பெரும்பகுதி செல்வத்தைத் தங்களுடைய ஏகபோக உரிமையாக்கி ராஜதர்பார் நடத்தும்.

4 அல்லது இந்த நாட்டை ஆளும் சர்க்கார் மக்கள் வரிப் பணத்தை ஊதாரித்தனமாக செலவு செய்வதும் யுத்த வெறி கொண்டு பொருளை நிறைய பாழாக்குவதுமாகும்.

இவைகள்தான் ஒரு நாடு வறுமையில் இருக்கக்காரணமாகும். வந்தாருக்கு வாழ்வளித்த நமது திராவிடம் இன்று வடநாட்டவரின் ஏகாதிபத்தியத்தில் அடிமைபட்டு கிடக்கிறது. ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் டாடா, பிர்லா கோயாங்கா போன்ற மார்வாரி சுரண்டும்கூட்டமும் போட்டியிட்டுக்கொண்டு இந்த நாட்டை வேட்டைக்காடாக்குகிறது. உள்நாட்டின் பெரும் பணமூட்டைகளாகவும், நிலத் திமிங்கலங்களாகவும் பேயாட்டம் போடுகின்றனர். போதாக்குறைக்கு மூலப் பொருட்களை 'கடவுள்' என்ற பெயரிலே கற்சிலைகட்கு காணிக்கையாக்கப்பட்டு இருக்கின்றது. இந்த கற்சிலைக்கு சோம்பேறிக் கூட்டத்தை பாதுகாப்பாக ஏற்படுத்தி வருகிறது இந்த நாட்டின் சமுதாயம். எனவே தான் இந்நாடு வறுமையாய் இருக்கக் காரணமாகும்.

இந்த திராவிட நாடு விடுதலையடைந்து—சுரண்டல் என்ற போர்வையிலே இருக்கும் ஆங்கிலோ அமெரிக்க சுரண்டல் முதல்—ஆற்றங்கரையிலே தருப்பப் புல்லேந்தி சுரண்டும் சுரண்டல் வரை ஒழிக்கப்பட்டு இந்த நாட்டு செல்வமனைத்தையும் இந்த நாட்டு மக்களுக்கு பயன்படுத்தி இந்த நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்காமல் வாழ்வு மலரமுடியாது என்பது திண்ணமாகும்.

இவைகளைச் செய்ய இந்த மாநில சர்க்காருக்கு திறமையில்லை என்பது மட்டுமல்ல, எந்த 'ஐக்கிய முன்னணி' வாதிகளும்ஆட்சிபீடமேறினாலும் இந்த நாட்டு மக்களின் பிரச்னை தீரவழியில்லை என்பது திண்ணம்.

தொழிற் சங்கமும் தி. மு. க. வும்

பண்டைக் காலத்தில், நாட்டில் பல தொழில்களில் குறைந்த அளவே தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தபோதிலுங் கூட முதலாளி—தொழிலாளி என்ற வேற்றுமையின்றி அவர்களுக்குள்ளாகவே பரஸ்பரமாக நடந்துகொண்டார்கள். ஆனால் இப்பொழுது நாட்டிலே தொழிற்சாலை அதிகரிக்க—அதில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்ய அவர்களுடைய மெய்யான ஊதியத்தைக் கொடுக்காது அவர்களுக்கு வேலையை நிறையத் தந்து குறைந்த கூலியைத் தந்து தனக்குப் பெரும் அளவு செல்வத்தைக் குவித்துக் கொள்கின்றனர்—சில பேராசைபிடித்த பணமுதலாளிகள். இதனால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவதும் இன்னபிற தொந்தரவுகளைக் கொடுத்து தொழிலாளர்களின் வர்க்கம் தலைதூக்க முடியாதபடி செய்தனர்.

தொழிலாளர்களும் கட்டுப்பாடாக தம் உரிமை குரலை எழுப்பி அவ்வப்போது போராடிப் போராடி சிற்சில வெற்றிகளைக் கண்டார்கள். அந்த நிலையில் தொழிலாளர்களின் உரிமைக் குரலை எழுப்ப ஒரு தொழிற் சங்கமும்—முதலாளிகள் தம் குறைகளைக் கூற ஒரு தொழிற்சங்கமும்—இவை இரண்டையும் விசாரித்து முடிவு கூற ஒரு தீர்ப்புக்கோர்ட்டும் தேவைப்பட்டது.

அன்று முதல் இன்று வரை பல வெற்றிகளை அடைந்தது தொழிலாளர் வர்க்கம். எனினும் அவர்களுடைய குறைகளைத்தெரிவிக்க ஒரே குரலாக இருந்த தொழிற்சங்கம் இப்பொழுது பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் அதனுள் புகுந்து தனக்குச் சாதமாக்க நினைத்து பல பிரிவுகளாக பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கின்றனர். ஒரு தொழிற்சங்கம் ஆறு மாத போனஸ் கேட்கிறது, மற்றொன்று நான்கு மாத போனஸ் கேட்கிறது. பிறிதொன்று மூன்று மாத போனஸ் கேட்கிறது.

இதனால் தொழிலாளர்கள் பல கருத்தைக் கொள்வதும் ஒற்றுமை யுணர்ச்சியின்மையும் ஏற்படுகிறது. தொழிலாளர்களை அந்த அரசியல் கட்சிக்காரர்கள் பிளவு படுத்துவது மட்டுமல்லாமல் மற்ற இயக்கங்களை பார்த்து கேலி பேசவும் தலைப்பட்டனர்.

'வேண்டாத பிரச்னையில் மக்களைத் திருப்ப வேண்டாம் பெரியார் ஈ. வே. ரா. அவர்களும், அறிஞர் அண்ணாதுரை அவர்களும், தொழிலாளர்கட்காக பாடுபட வேண்டுமென அழைப்பு விடுக்கிறேன்''

எனவும், பல மேடைகளிலே தாங்கள்தான் 'முற்போக்குவாதிகள்' எனக் கருதிக் கொள்வோர் சவால் விட்டனர் இந்த அழைப்பு அனுப்பப்பட வேண்டியது நயக்கல்ல என்பது ஒருபுற மிருப்பினும் நாட்டு விடுதலையே மூலக்கொள்கையாகக் கொண்டுள்ள மாபெரும் மக்களின் இயக்கமான திராவிட இயக்கம் அதையும் ஏற்றுக் கொண்டது.

பிளவுபடுத்துவது யார்? எது பிற்போக்குத்தனம்?

நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளிடத்திலும் ரெயில்வே தொழிலாளர், பஞ்சாலைத் தொழிலாளர் மற்றும் பலரிடத்தும் காலித்தனமே கண்ணியமாகக் கொண்டுள்ள சில அரசியல் கட்சிக்காரர்கள் தவறானமுறையில் திராவிட இயக்கத்தைப் பற்றி கூறிவருகின்றனர். சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டு திராவிட நாடு பிரிந்தால் ஒழிய நமது வாழ்வில்லை என பல ஆதாரங்களைக் காட்டிவரும் மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம்—விவசாயி பஞ்சாலைகள் மற்றும் தொழிலாளர் பகுதியை அனைத்தும் முழுமூச்சோடு வேலை செய்யத் தலைப்பட்டுவிட்டதை அறிந்த சில 'தான்தோன்றிகள்' தொழிலாளர்களைப் பிளவுபடுத்துகிறது திராவிட இயக்கம் 'பிற்போக்கு வாதிகள்' 'வகுப்புவாதிகள்' 'இனவெறியர்கள்' என்றெல்லாம் வாய்கிழிய தப்பட்டம் அடித்து வருகிறார்கள் எனினும், நமது லட்சிய முழக்கம் எங்கு நோக்கினும் கேட்கிறது.

அணிவகுத்து நிற்க வாரீர்!

திராவிடம் விடுதலை அடையும்வரை வறுமை ஒழிய—வாழ்வு மலர—வழியில்லை என்பதை உணர்ந்த நாம், விவசாயிகள், ரெயில்வே-பஞ்சாலைத் தொழிலாளர்கள், இளைஞர்கள்—மாணவர்கள்—நடுத்தர மக்கள்—ஆக அத்தனை திராவிடப் பெருங்குடி மக்களும் ஒரே மூச்சாக நின்று.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழக்கமிட்டு நாட்டு விடுதலைக்குப் பாடுபட அனைவரும் அணிவகுத்து நிற்போம் வாரீர்! வாரீர்!

—இரா. சுந்தரம், கோவை

திராவிடன்

சந்தா விவரம்

ஆண்டு சந்தா, ...	ரூ. 8	0	0
ஆறுமாதம் ...	ரூ. 4	0	0
வெளிநாடு			
ஆண்டு சந்தா ...	ரூ. 9	0	0
ஆறு மாதம் ..	ரூ. 4	8	0
தனிப்பிரதி ...	ரூ 0	3	0
,, வெளிநாடு ,,	0	3	6

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92. தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 108-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

செய்திகள்

மறுமலர்ச்சி நாடக மன்றம் பாப்புநகர், ஆமதாபாத்

20-2-55 ஞாயிறு மாலை 4-மணிக்கு மறுமலர்ச்சி நாடக மன்ற, நிர்வாககுழு தேர்தல் நடைபெற்றது. அதுபோது சமால்பூர், மணிநகர், நரோடா பகுதிகளிலிருந்து பல தோழர்கள் வருகை தந்திருந்தனர். தேனீர் விருந்தும், கீழ்க்கண்ட குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது,

இரா. சு. சேசையா, சு பாபு, (நரோடா வட்ட தி மு. க. செயலாளர்) சந்திரன் (சமால்பூர்) கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் பாட்டு.

காளிதாசன்—புல்லாங்குழல், ப. மணி—கடம், புதுவை வைத்தியநாதன்—மோர்சிங்.

மன்றத்தின் சார்பாக சு. புரட்சி மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தலைமை வகித்த புதுவை வைத்தியநாதன் 'நாடகம் எவ்விதம் நடைபெறுதல் வேண்டும், அதன்முறை யாது' எனும் கருத்துப்பட சொற்பெருக்காற்றி தேர்தலையும் நடத்தி வைத்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்கள்;

செயலாளர் சி. தேவராசு, துணைச் செயலாளர் சி. இராமானுசம், பொருளாளர் புதுவை வைத்தியநாதன், செயற்குழுவினர்: சு. புரட்சிமாறன், இரா. சு, சேசையா, சு. பாபு, வி. நாகராசன், நடிப்புப் பயிற்சி சு. புரட்சி மாறன், துணைப்பயிற்சி புதுவை வைத்தியநாதன், இசை பயிற்சி இரா. சு. சேசையா.

இம்மறுமலர்ச்சி நாடக மன்றம் இதுவரை மூன்று நாடகங்கள் நடத்தி நான்காவது நாடகமாக தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தீட்டியதும், மதுரைச் செழியனல் நாடக உருவாக்கப்பட்டதுமான 'விந்திய வீரன்' நாடகம் நடத்தவும் ஆவன செய்யப்பட்டு வருகிறது.

வேலநத்தம்

சேலம் அடுத்த வேலநத்தம் தி. மு. கழக 5-வது ஆண்டு விழா 18-2-55 மாலை 6 மணிக்கு ஞானானந்த ஆஸ்ரமத்தின் திடலில் நடைபெற்றது. சேலம் ஈ ஆர், கிருஷ்ணன் தலைமை வகித்து சமூக சீர்திருத்தம் குறித்து பேசினர். தோழர் என். வி. நடராசன் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றி—தற்கால அரசியல் நிலையை விளக்கினர்.

திருச்சி சங்கரன் முன்னேற்ற கல்லூரி தினம்

20-2-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு கல்லூரி தினம் கொண்டாடப்பட்டது. அதுசமயம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திருக்குறள் பற்றி புதிய விளக்கவுரை, தக்க சான்றுகளுடன் தந்தார்கள் இரவு 8 மணிக்கு கவிஞர் தம் சொற்பொழிவை முடித்தார். உடன் கவிஞர் முன்னிலையில் திரு எம். கே. கோவிந்தராச பாகவதர் தம் குழுவினருடன் கவிஞர் அவர்களின் பாடல்களைப் பாடினர் இசைவிருந்து இரவு 11-மணிக்கு முடிவுற்றது. கல்லூரி மாணவர் சுந்திரராசன் (பி. ஏ.,) நன்றியுரை நவில விழா நிகழ்ச்சி இனிது முடிவுற்றது. ஏ ரா ள மா ன மாணவர்களும் வந்திருந்தனர்.

அழகிரி நினைவு மன்றம்

20-2-55 காலை 11 மணிக்கு தோழர் எம். எஸ். ஏ. காதர் அவர்கள் தலைமையில் சென்னை 31 வது வட்டத்தில் 'அழகிரி நினைவு மன்றம்' நிறுவப்பட்டு செயற்குழு உறுப்பினர் தேர்தலும் நடத்தப்பட்டது: தோழர்கள் காந்தராவ் தலைவராகவும். எம். எஸ். ஏ. காதர் துணைத்தலைவராகவும், இரா. சேரன் செயலாளராகவும், த: மணி துணைச்செயலாளராகவும். அன்புவிழி பொருளாளராகவும். எ. மணி, தீனதயாளன், கருமுகில், செல்வம், இராஜ அ. நித்தியானந்தம் ஆகியோர் செயற்குழுஉறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

"பகதூர் சாஸ்திரியின் அபாரத் திறமை!"

நீ அவல் கொண்டுவா—நான் உமி கொண்டு வருகிறேன். இருவரும் சேர்ந்து சுத்தப்படுத்தித் தின்னலாம்'' என்றுனும் ஒரு பேர்வழி; அந்த கதையைப்போலவே டெல்லி ஆட்சி பீடத்தில் ரயில்வே இலாகா மந்திரியாயிருக்கும் தோழர் லால்பகதூர் சாஸ்திரி தமது ரயில்வே வரவு—செலவு திட்டத்தை டெல்லிப் பாராளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிருர்!

*

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ரயில் வண்டியில் 3-ம்வகுப்புக்கு 4 மைலுக்கு ஒரு தம்பிடி வீதம் கட்டணம் உயர்த்தப்படுமாம்! அதாவது:—

1. 150 மைல் வரை மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வோருக்கு அதிகக் கட்டணம்.

2. 151 முதல் 300 மைல் வரை இப்போதுள்ள கட்டணமே.

3. 300 மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்பவர்களுக்கு கட்டணம் சற்று குறைக்கப்படுமாம்!

பிளாட்பாரம் டிக்கட்டுகள் 2 அணுவிலிருந்து ஒரு அணுவாகக் குறைக்கப்படும்!

ஆக இவ்வித மாற்றத்தினுல் ரயில்வே இலாகாவுக்கு நஷ்டம் என்று கருதி விடாதீர்கள். மூன்றும் வகுப்பு கட்டணத்தை உயர்த்தி—பிளாட்பாரம் டிக்கட். கட்டணத்தைக் குறைத்து இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் இதன் மூலம் 6 கோடி. ரூபாய் அதிக வருவாய்; கிடைக்குமாம்! ஏழை—நடுத்தர மக்கள் மீது காங்கிரஸ் சர்க்காருக்கு எவ்வளவு காருண்யம் பார்த்தீர்களா!

போனோ—'சோஷலிஸம் மாதிரி'க்கு ஜேய்! பகதூர் சாஸ்திரிக்கு ஜேய் ஜேய்!!

நான் மேலே குறிப்பிட்ட கதைக்கும் இந்த பகதூர் சாஸ்திரியின் அரசியல் செப்படி வித்தைக்கும் பொருத்தம் தானே.

—நக்கீரன்

சரசுவதி—கருப்பண்ணன்

11—2—55-ம் நாளன்று ரேமங்கலம் மேலக்காட்டில் தோழர் கீ. மு. சிவசுப்ரமண்ய அருணுசல சேதுபதி அவர்களின் மகன் கருப்பண்ணனுக்கும், சேந்தன்குடி சிங்காரவேல் அவர்களின் மகள் சரசுவதிக்கும் மணமகன் இல்லத்தில் திருந்திய திருமணம் தோழர் து. அ. செல்லமுத்து (தேவர்) தலைமையில் சிறப்புற நடந்தேறியது மணமக்களைப் பாராட்டி பேராவூரணி அடைக்கலம், பனங்குளம் சிவகுருநாதன் மணிமொழி பேராவூரணி வீரர் குழந்தை ஆகியோர் பேசினர். ஏராளமான வாழ்த்திதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—. நன்றி-நிர்வாகி.

கம்பம்

19-2-55-ம் தேதி மாலை 5-மணிக்கு கம்பம் ஏல விவசாய ஐக்கிய உயர்நிலைப் பள்ளி மாணவ இலக்கிய மன்றத்தின் சார்பில் "தமிழ்க் திருநாள்'' நடுக்தரப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் பண்டித வித்வான் திரு சங்குப் புலவர்

மு. கருணாநிதி

இன்னும் இடது கண்ணில் ஊறும் வலியும் இருப்பது காரணமாக தோழர் கருணாநிதி மீண்டும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, ஐந்தாவது முறையாக ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. அவர் பூரணகுணமடைய இன்னும் ஒரு ஆபரேஷன் தேவையென்றும். அது இந்த வியாழனன்று, செய்யப்பட வேண்டுமென்றும் டாக்டர்கள் கூறியிருக்கிருர்கள். இரண்டு வாரகாலம் மருத்துவ மனையிலேயே மு. க. ஓய்வு பெறுவார்.

அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் தமிழ்க் திருநாள் பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மாணவ இலக்கிய மன்றத்தின் சார்பில் பள்ளியின் வாசகசாலைக்கு 'கலைக் களஞ்சியம்'' எனும் புத்தகத்தை பள்ளியின் மாணவத் தலைவர் திரு எம். முகையதீன் பிச்சை அவர்களால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

பொதுக்குழு முடிவுகள்—தொடர்ச்சி

களைக் கையாளுவது என்று இந்தப் பொதுக்குழு தீர்மானிப்பதுடன், இந்த நிதி திரட்டும் காரியத்தைக் கவனிக்க, கீழ்க்கண்டவர்கள் கொண்ட ஒரு தனிக்குழுவை அமைக்கிறது.

(1) தி. மு. க., நம் இயக்கப் பற்றுள்ள கலைஞர்களைக் கொண்ட ஒரு சிறு நாடகக் குழுவை நிறுவி, தமிழகத்தில் எல்லா முக்கியமான ஊர்களிலும் நாடகங்களை நடத்தி, நிதி திரட்டுவது;

(2) நாடக மூலம் நிதி திரட்டியான பிறகு, மாவட்டங்களுக்குப் பிரிவுத் தொகை நிர்ணயம் செய்து, தலைமை நிலைய நன்கொடை குறிப்புச்சீட்டு மூலம் பெறுவது;

(3) இருமுறைகளிலும் நிதி திரட்டுவதற்கான காரியத்தைக் கவனிக்க தோழர்கள் ஈ. வெ. கி சம்பத், ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனுர் கொண்ட கமிட்டியும், அவர்கள் மேலும் ஆறுபேர்வரை சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரமும் அளிக்கிறது.

—தலைவர்

தொழிலாளரிடை பணிபுரிய

தொழிற் சங்கங்களில் நேரடியாக தி.மு. கழகத் தோழர்கள் ஈடுபட்டுநடத்துவதென்ற அரக்கோணம் பொதுக்குழுவின் (1953-ம் வருட மே மாதம் 31-ம் தேதி) தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் முறையில் ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் தொழிலாளர் பகுதிகளில் பணிபுரிந்து தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படிக்கும் தொழிற்சங்க அமைப்புக்கான சூழ்நிலைஏற்படுவதை அவ்வப்போது தி. மு கழகத் தலைமை நிலையத்துக்கு அறிவிக்கும்படியும் இக்குழு கேட்டுக்கொள்கிறது.

—கோவை இராசமாணிக்கம்; திருச்சி பராங்குசம்

சட்டதிட்டத் திருத்தம்

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்டங்களில் கீழ்கண்ட திருத்தங்களையும் சேர்ப்புகளையும் ஏற்று, பொதுக்குழு திருத்துகிறது:—

திருத்தம் (1)

சட்டதிட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், 23-வது விதிக்கடுத்து 'நகரக்குழு' என்ற தலைப்பை 'நகரக் கிளை' என்று திருத்தவும்.

திருத்தம் (2)

சட்டதிட்டப் புத்தகம்—பக்கம் 6-ல் 24-வது விதியில் 'நகரக் குழு' என்றிருப்பதை 'நகரக்கிளை' என்று திருத்தவும்.

திருத்தம் (3)

சட்டதிட்டப் புத்தகம்—பக்கம் 6-ல் இப்போதுள்ள 25-வது விதியை நீக்கி கீழ்க்காணும் விதியை சேர்த்துக் கொள்ளவும்;—

25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக்கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு நகரச் செயற்குழுவின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக்கொண்டு இயங்கலாம்.

(அ) வட்டாரக் கிளை ஒவ்வொன்றும் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் உட்பட ஏழுபேர்களைக் கொண்ட ஒரு வட்டாரக் குழுவை தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

(ஆ) வட்டாரக் குழுவுக்கும் நகரக்குழுவுக்கும் இடையே உள்ள தொடர்பு, நகர குழுவின் நடவடிக்கைகளுக்கு, நகரக் குழுவின் மேற்பார்வையில் கட்டுப்பாட்டின் கீழ் துணைபுரியும் அளவே உண்டு.

திருத்தம் (4)

சட்டதிட்டப் புத்தகம்—பக்கம் 6-ல் இப்போதுள்ள 26-வது விதியை நீக்கிக் கீழ்க்காணும் விதியை சேர்த்துக்கொள்ளவும்:—

'ஒவ்வொரு நகரக் கிளையும் (பொது உறுப்பினர்கள் அனைவரும் அடங்கியது) 2 ஆண்டுக்கு ஒரு முறை, பொதுச்செயலாளர் குறிப்பிடும் நாளில்—செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், செயற்குழுவினர் — ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'

—ஈ வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன்

அனுதாபம்

விருதுநகர் நகரசபைத் தலைவரும், பாண்டிய மண்டலத்தில் திராவிட இயக்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவருமான திரு. எம். எஸ். பெரியசாமி அவர்களும், தோழர் கண்ணதாசன் அவர்கள் தந்தையார் திரு. சாத்தப்பன் அவர்களும் இயற்கை எய்தியது குறித்து, இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

கழகச் செய்திகள்

பம்பாய்

சென்ந்திர பாண்டியனூர் பகுத்தறிவு மன்றம்

6—2—55 பகல் 12 மணியளவில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், அழக முத்து அமிர்தம் ஆகியோர்களுக்கு மன்ற சார்பாக தேநீர் விருந்தளிக்கப் பட்டது. இதனை துணைச் செயலாளர் எ. எஸ். ஆசைத்தம்பி துவக்கி வைத் தார். தோழர் சி. த. மு. இரா. ஆரிய சங்காரன் அவர்களை தலைமை தாங்கும் படி கேட்டுக்கொண்டார். தலைவர் முன் னுரைக்குப் பின் அழகிரி சொற்பயிற்சி மன்ற (மாதுங்கா) சார்பாக சொற் பொழிவாற்ற வந்திருந்த தோழர்கள் டி. கே. சீனிவாசன், அழகமுத்து ஆகி யோர்கள் மன்றத் தோழர்களுக்கு ஒரு பெரிய அறிவுரை நிகழ்த்தினார்கள். தலை வர் முடிவுரைக்குப் பின் இரா. தர்மரா சன் இன்னிசை நடந்தேறியது.

பிரிவுபசாரம்

12—2—55 பம்பாய் தாராவி ஆகா சவாடி செ. 52 திரு. எஸ். சந்தானம் அவர்கள் இல்லத்தில் நாள்குனேரி வட் டார ஆதிதிராவிட சங்கத் தலைவர் எஸ். மாசானம் அவர்கள் தாய்நாடு செல்வ தால் அன்னாருக்குப் பிரிவு உபசாரக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மேற் படி சங்க நிதிக்கமிட்டி தலைவர் தோழர் வி. எஸ். முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். பின்னர் தோழர்கள் எம். ஏ. சண்முகம், என். எஸ். மாடசாமி ஆகியவர்கள் தலைவரின் அரும்பெரும் சேவை குறித்து பாராட்டிப் பேசினார் கள். பின்னர் தாய்நாடு செல்லும் திரு எஸ். மாசானம் அவர்கட்கு மேற்படி சங்கத்தின் சார்பில் கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன.

செ. பாளையம்

16—2—55 மாலை 7 மணிக்கு செ. பாளையம் இரா. முருகேசனார் இல்லத் தில் முருகேசனார் தலைமையில் தி. மு. க. செயற்குழு கூடிற்று அவ்வமயம் உறுப் பினர் 21 பேர் கூடியிருந்தனர். வை. சிவப்பிரகாசம் செயலாளராகவும் டி. தண்டபாணி பொருளாளராகவும் மாற் றியமைக்கப்பட்டது.

நமது கிளைக் கழகத்துக்கென 'நம் நாடு' பத்திரிகைக்கு ஒரு ஆண்டு சந்தா கட்டி நன்கொடையாக உதவிய ஆமதா பாத் தோழர்கள் எஸ். அப்பாவு, கே. தண்டபாணி அவர்கட்கும் மற்றுமுள்ள தோழர்களுக்கும் நன்றி கலந்த வணக் கத்தை தெரிவித்துக் கொள்வதென் றும், இம் மாதத்திற்குள் பொதுக் கூட் டம் நடத்துவதென்றும் அதற்கு சி. பி. சிற்றரசு அவர்களை அழைப்பதென் றும் இயக்கத் தோழர்கள் அனைவரும் கூடுமான வரையில் கைத்தறி ஆடை யை அணிவதுடன் அதன் சிறப்பை மக் கள் உணரும் பொருட்டு ஆவன செய்வ தென்றும் முடிவு செய்யப்பட்டது.

திட்டை

17—2—55 வியாழன் மாலை 6 மணிக்கு தோழர் குஞ்சிதம் தலைமையில் சீயாழி அடுத்த திட்டை தி மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடை பெற்றது. தோழர் கே. எஸ். சௌந்தர ராசன் தற்கால அரசியல் நிலையை விளக்கியும் தோழர் என். கிட்டப்பா பூரான இதிகாசங்களினால் ஏற்பட்ட தீமைகளையும் அதனை அகற்ற அறிவியக் கம் பணிபுரியும் விதத்தினையும் தோழர் என். வி. நடராசன் திராவிடத்தின் சமூக, பொருளாதார அரசியல் விடுதலை குறித்து தக்க மேற்கோள் காட்டியும் திராவிடநாடு திராவிடருக்காக வேண் டிய அவசியம் குறித்தும் சொற்பொழி வாற்றினார்கள்.

புழல்

புழல் (செங்குன்றம்) தி. மு. கழக உறுப்பினர் தோழர் என். பாலசுந்தரம் 11—2—55 காலை 4 மணி முதல் 13—2—55 மாலை 4 மணி வரை 60 மணி நேரம் இடைவிடா சைகிள் சவாரி செய்து இடையிடையே மக்களெல்லாம் ஆச்ச ரியப்படக்கூடிய அளவில் இதுவரை மாதவரம் பிர்க்காவிலேயாருமே செய்து காட்டாத அதிசயிக்கத்தக்க வேலைகளை செய்து காட்டினார். மழைபெய்தும் சைகிளைவிட்டு இறங்கவில்லை.

13—2—55 4-30மணிக்கு மாதவரம் தி மு. கழக மாவட்ட பிரதிநிதி தோழர் எ. ஜெயராஜ மாதவரம் தி. மு. க. சார் பிலே கைத்தறித் துண்டும் மலர்மாலை யும் அணிவித்து சைகிள் சவாரியை முடித்து வைத்தார். தோழரை பாராட்டி தோழர்கள் டி. பி. ஏழுமலை எம். எல். ஏ., பெ. த. இன்மொழி, எம். கணபதி (ஜி. போ. உ.) ஆகியோர் பேசினர். பல கழகங்கள் மன்றங்கள் பொதுமக்கள் சார்பிலே ஏராளமான மலர்மாலைகளும் கைத்தறித் துண்டு களும் பணமுடிப்புகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

சித்துக்காடு

9—2—55—ல் சித்துக்காடு தி மு. கழ கத்துக் கூட்டம் பேராவூரணி தோழர் கே. அடைக்கலம் அவர்கள் தலைமையில் கூடி தி. மு. க. சார்பில் 15 நாட்களுக் கொருமுறை கழகக் கொள்கைகளை பொதுமக்களிடம் விளக்கிக் கூறும் அளவிற்கு பயிற்சி பெற சொற்பயிற்சிக் கழகம் அமைக்கப்பட்டு அதற்குதோழர் எஸ். பழனிவேல் அவர்களை செயலாள ராக நியமிக்கப்பட்டதுடன் மார்ச் 3-ம் வாரத்தில் தோழர்கள் என். வி. நடரா சன், என். எஸ். இளங்கோ இவர்களைக் கொண்டு தி. மு. க பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதென தீர்மானிக்கப் பட்டது.

இவ்வூரில் 1954-ம் ஆண்டு ஆரம் பித்து நடந்துவரும் ஔவை பதிப்பகத் தை இன்று முதல் சித்துக்காடு தி.மு.க. சார்பிலேயே நடத்துவதென்றும் தீர் மானிக்கப்பட்டது.

ஈழத் தமிழர்களின் இதயக் குமுறலை எடுத்துக் காட்டும் இலட்சிய ஏடு!

"உரிமைக் குரல்"

இணை ஆசிரியர்கள் :
நா. பழனிசாமி, வி. எஸ். முருகன்

இம்மாத இதழ், விற்பனையாகிறது

கவிதைச் சோலையிலே
கருத்து மேடையிலே
இலக்கிய வளம் காண வாரீர்

தனிப் பிரதி ... அணா. 2.
வருட சந்தா ... ரூ. 2.

முன்பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் தேவை.

"உரிமைக்குரல்" அலுவலகம்
69/1 பீர்சாகிபு வீதி, கொழும்பு

துன்பமே யில்லை!

காலையெழும் ஒலியினிலே அவளைக் கண்டேன்.
கடல் அலையில், ஒலி புனலிற் கண்டேன்! அந்திச்
சோலையிலே குயிலிசையிற் "காகா" என்னும்
காகத்தின் கரைதலினுங் கண்டேன்! விண்ணின்
மூலையிலே 'கடமடா' எனவு ணர்த்தும்
முகில் முழக்கில் அவளிருந்தாள்! 'அம்மா' என்றே
வாலசைக்கும் பசுக் குரலில், கிளியின் பேச்சில்
வளருமத் 'தமிழெ'ன்பாள் கவிதை தந்தாள்!

சிறுகுழந்தை மழலையிலே தவழ்ந்து நின்றாள்.
'திருவிடத்'தில் உறைகின்றாள் ஏடெடுத்து
நறுங்கவிதை தொடுப்பாரின் விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்! அடடே, செந்தோப்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் பாடும்.
புதுப்பாட்டிற் பூரித்தாள்! விளைந்த பாட்டின்
சிறப்பினிலே என் செவியை நிறுத்தினாள்! என்
சிந்தனையில் பெருகேற்றி மகிழ்ச்சி செய்தாள்!

சலசலக்கும் இலைகளிடை மறைந்து வந்து
சதிராடும் வளையொலியிற் புகுந்து கொண்டாள்!
உலைகொதிக்கும் பானையுள்ளும் நுழைந்து பின்னர்
ஓங்காரக் கூச்சலுக்கும் உதவி செய்தாள்!
மலைமீது மரங்களிடை தாவித் தாவி
மந்திபாடும் போதாங்கு மகிழ்ந்து நின்றாள்!
இலங்கு கொள்கை எழுப்பி வானில் பறக்கும் கட்சிக்
கொடிகளிடை "சடசட"த்தாள் என்னே விந்தை!

புயல் கண்டேன், தேன் கண்டேன் அதன் புறத்துப்
பொருந்தியவாம் சுவைதமிழில் கண்டேன்; மற்றும்
உயர்தெலுங்கு, மலையாளம். துளுவுங் கண்டேன்;
ஒளிர் தமிழைக் கண்டேன்; நல்இன்பங் கொண்டேன்
பயின்தமிழர் வாழ்க்கையிலே பசைய வள்காண்!
பழமையினுற் சாகாத இளையவள் காண்!
அயர்ந்தவரே நோக்கிடுவீர் எங்கும் உள்ளாள்
அருந்தமிழின் வழிபட்டால் துன்பமே யில்லை!

புத்தாசு. பம்பாய்

என். வி. என். பேச்சு தொடர்ச்சி...

அதுபோலவே டெல்லி ஏகாதிபத்தி யத்தின் சுரண்டல் கொடுமையைத் தகர்த்தெறிய பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாம் அந்த டெல்லிஏகாதிபத்திய பீடத்துக்கு துரோகிகளாகவும்—விரோதிகளாகவும் தானே இருக்க முடியும்! இந்நிலைக்கு நம்மை கொண்டு செல்வது வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆட்சியே யன்றி நாமல்ல.

இந்த மாநிலத்தில் கிடைக்கிற வரிப் பணம் அத்தனையும் இந்த மாநில மக்க ளுக்குச் செலவழிக்கப்படுகிறதா?—இல் லையே! இங்கு கிடைக்கிற கொழுந்த வரிகள் எல்லாம் வடநாட்டிற்கல்லவா கொள்ளை போகின்றன! வருமான வரி, சுங்க வரி, ஏற்றுமதி—இறக்குமதி வரி, காப்பி தேயிலை வரி, போன்ற பெரும் பெரும் வரிகள் எல்லாம் டெல்லிக் குத்தானே; வஜா செய்கிற நிலவரியும் விற்பனை வரியும் மட்டுந்தானே இந்த மாநிலத்திற்கு! இப்படி வரிகளை எல் லாம் டெல்லிக்குக் கொட்டிக்கொடுத்து விட்டு இங்குள்ள மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமானால் அதற்கு டெல் லியிடம் காவடி எடுக்கிற அவலநிலை ஏனிருக்க வேண்டும்! நாம் கொடுக்கிற வரிபபணம் நம் மக்களுக்குச் செலவு செய்யப்பட வேண்டுமென்று கூறுவது எப்படித் தவறாகும்! நமது வரிகளை வாரி எடுத்துச் செல்லும் வடநாட்டு ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்கிறது தி. மு. கழகம், இதில் எப்படி தவறிருக்க முடியும்?

இந்த நகரத்தின் உதவி மேயர்—சோட்டாபாய் தேசாய் என்ற வட நாட்டுக்காரர். எத்தனையோ லட்சம் கன்னட தமிழ் மக்களைக் கொண்ட பெங்களூர் நகருக்கு உதவி மேயராக ஒரு வடநாட்டுக்காரர் இருக்கிறார் என் றால் இங்கு வடநாட்டவரின் ஆதிக்கம் எவ்வளவு இருக்கிறது! இதைப்போல வேதான் சென்னையிலும் சௌகார் பேட்டை இருப்பதும்! அதுபோல ஆந் திர கேரள மாநிலங்களில் குஜராத்தி மார்வாரிக் கூட்டம் குடியேறி வட்டிக் குப் பணம் கொடுத்து கொழுக்கும் பயங்கர நிலைமை இருப்பதும் நாடறிந்ததாகும். இந்த நிலைமை வளரு வது நல்லதா? நம் மக்களின் வாழ்விற்கு உகந்ததா!—என்று அருமை காங்கிரஸ் நண்பர்கள் சிந்திக்க வேண்டும்.

மொழிவழி மாநிலம் வேண்டும்—என அன்று காங்கிரஸ்காரர்களே முழங்கினார்கள். ஆனால் இன்று மொழி வழி மாநிலக் கோரிக்கையை அடக்க முயற்சிக்கிறார்கள் வடநாட்டுக்காரர்கள்.

அன்றிருந்த வெள்ளைக்காரர்கள் ஏமாற்றியது போலவே இன்று வட நாட்டவர்களும் கமிட்டி அமைக்கிறோம் கமிஷன் நியமிக்கிறோம் என்று காலங் கடத்தி பிரச்னைகளை மழுப்புகிறார்கள்.

எனவே இன்று காங்கிரஸ்காரர்கள் குருட்டு தேசபக்தியால், நம் தென் னாட்டினை வடநாட்டவர்கள் சுரண்டுகிற அடிமைக் காடாக்கி வருகிற உண்மை யை மறக்கக் கூடாது.

மேலும் தோழர் என். வி. நடராசன் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு ஏமாற்றப்பட்டிருப்பதை புள்ளி விவரங் களுடன் சுட்டிக்காட்டி இந்த நிலைமாற வேண்டும் என்பதுதான் கழக நோக்க மும் இலட்சியமே தவிர மந்திரி பதவி யல்ல என்றியம்பி திராவிடநாடு திரா விடருக்காகிற நிலையைப் போராடி உரு வாக்க காங்கிரஸ் நண்பர்கள் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

முகவரி மாற்றம்

எ. கண்ணப்பன்
பொருளாளர்
சென்னை மாவட்ட தி. மு. கழகம்
53, சஞ்சீவிராயன் கோயில் வீதி
சென்னை-21.

சுமைதாங்கி

மா. தங்கவேலர்

முன் கதை—அமுதவல்லியின் கடிதத்தைப் படித்த நர்மதா—மேலும் மனக்குழப்பமடைந்தாள்—தனது சென்றகால சம்பவங்களை நினைத்து வருந்தினாள். வாழ்க்கையிலேகூட நர்மதாவுக்கு சலிப்பு ஏற்படுகிறது.

25

வேடனின் அம்புபட்ட புள்ளிமானானாள் நர்மதா. துடிதுடித்த நெஞ்சம் துவண்டு போயிருந்தது. சோர்ந்து போன கரங்களிலே விரிந்து பரவிக் கிடந்த கடிதங்களை ஒன்று சேர்த்துக் கொண்டிருந்தாள். கடிகாரம் கடமையைச் செய்து கொண்டேயிருந்தது. நடுநிசியின் போதை அவளுக்குத் தாலாட்டுப் பாடவேயில்லை. தூங்காத நிலவு அந்தரத்திலே தொங்கிக் கொண்டுதானிருந்தது.

தென்றலடித்தது......இயற்கையின் அந்த அன்புப் பரிசைக்கூட ஏற்று அவள் மகிழ்ந்து போய்விடவில்லை. உள்ளம் எரிமலையாகி கொதித்துக் கொண்டிருக்கும் போது உடலிலே குளுமை மூத்த விட்டுத்தான் என்ன பயன்? பொன்னான முகத்திலே புன்னகை மலர் இதழ் விரிக்கவில்லை—சிரிக்கவில்லை. அழுத சிலையானாள். பாடாத குயிலானாள். காலச் சிற்பிக்குப் பலரை சோகந்தாங்கிகளாக சிருஷ்டித்துப் பார்ப்பதிலே முழுக்க முழுக்க ஆர்வம். சேற்றிலே யிருக்கும் செந்தாமரையைப் போல அந்த வேதனை தாங்கிகள் உலகக் குளத்துக்கு அழகைத் தராமல் போய்விடவில்லை. ஊசி முனையிலே தவமிருக்கும் உல்லாச ரோஜா; முடைநாற்றச் சேற்றிலே முறுவல் பூக்கும் தாமரை...பார்ப்போருக்குப் பரவச காண்டத்தைப் படித்துக் காட்டுகிறது. பூரித்த உடல்—புகையும் உள்ளம்! தங்கந் தோண்டுபவனின் திருக்கரம், தரித்திர நாராயணனின் பாவக்கரமாக அமைந்து விடுகிறது.

மூச்சடக்கி முத்தெடுப்பவன் மட்டுமென்ன முல்லைக்காட்டிலா அழகு நடை போடுகிறான்? அவனுந்தான் தீய்ந்துபோன இதயத்தோடு திண்டாடித் திரிகிறான்! வெள்ளிக் கிண்ணத்திலே யிருக்கும் பால் யாருக்குப் பயன்படுகிறது? வெள்ளிக் கிண்ணத்துக்கு சுமையைத் தாங்கிக் கொண்டிருந்ததுதான் மிச்சம். அனுபவிப்பவர் யார் யாரோ?

சிரிக்கும் சிங்காரியை வரையும் சித்திரக்காரன் அழகும் அபலையையும் ஒரு குளோசப் 'போஸ்' காட்டி தீட்டாமல் விடுவதில்லை. நர்மதாவும் வேதனைச் சித்திரத்தின் தொகுப்பிலே யிருந்துதான் தன் தொல்லைக் கதையைக் கூறி நின்றாள். 'மகிழ்ச்சி மலையே நீ எனக்குத்தான் சொந்தம்' என்று வம்பு பேசி வட்டமிட்டான் கபடன் கண்ணான். கையிலே கட்டாரியோடு அவனுக்குப் பக்கத் துணையிருந்தான் போக்கிரி பக்கிரி. இப்போது அவர்கள், அந்தக் கள்ள நெஞ்சர்கள் கூட்டோடு சிறைக்குள்ளே. காருண்யமிக்க அரசாங்கத்தின் 'இரும்புக் கம்பிகள்' அந்த முரடர்களைத் தடுத்து நிறுத்தியது. மூச்சைப் பிடித்த கோரக் கரங்கள் ஒதுக்கப்பட்டன. ஆறுதல் பிறந்தது...பூரணமாக அல்ல.

தன்னைச் சுற்றி மட்டுமல்ல, வீட்டுக்குள்ளேயும் வேதனை நிலையாகக் குடியிருப்பதை அவளால் தடுக்கவே முடியவில்லைதான். காதலன் குமரனைப் பிரிந்து தவித்து கபடன் கண்ணனால் கற்பிழந்த பூங்கொடி சுந்தரி அவளோடு தானிருந்தாள். தேவதாஸால் பாலைவனத்துக்கு விரட்டியடிக்கப்பட்ட பைங்கிளி வேணியும் எங்கும் போய்விடவில்லை. கனத்துப்போன நர்மதாவின் உள்ளத்திலே காய்ந்துபோன முள்ளைத்துக் கொண்டேதான் இருந்தது. வெறிநாய் கடித்தவனுக்கே கல்லடியும் கிடைத்தது போலாகியது நர்மதாவின் நிலை. அவளது சேவையோ பிறர் கூறும் முறை கேட்டு குறை போக்கும் நற்பணி. ஆனால், அவளது குறைகள்...? ஆற்றுக்குள்ளே யிருக்கும் ஓடம் எல்லோரையும் கரைசேர்க்கிறது, ஆனால் அது கரை யேறுவதில்லையே!

அழகான வீணையிலிருந்து அபஸ்வரம் எழுப்புவது போலயிருந்தது அழகி வேணிக்கு நாளும், நாளும். அமுதவளைச் சிரிக்கவைத்தாள் சிங்காரி நர்மதா. கிளிக்குத் தங்கத்தால் கூண்டும் வெள்ளிக் கிண்ணத்திலே பாலுமிருக்கிறதே என்பதற்காக கூண்டே சுகம்தரும் என எண்ணி விடாது எந்தக் கிளியும். அது போலத்தான் அமுத மொழியும் வாழ்வுக் கதையையும் கூறிக் கொண்டு நர்மதா போன்றோர் உலகினாலும் ஒடிக்கப்பட்ட தன் வாழ்வுக் கொடியை எண்ணித் தான் கண்ணீர் சிந்தினாள். அந்தக் கண்ணீர் வாளாகவில்லை கொடியவனுக்கு. இவளுக்குத்தான் வேதனையும்—சோதனையும்.

நிலவுமேனி வேணிக்கு போதையூட்டிய நேரத்திலே நிர்மலமான அவள் முகத்தைத் தாங்கிப் பிடித்து...முகத்தோடு முகம் சேர்த்தாய். மூச்சோடு மூச்சு கலக்கும் நாள்தான் எனக்கு முழு வாழ்வு என்று கானக்குரலெடுத்து அவன்—தேவதாஸ்—பேச ...புதுவாழ்வு தரவந்த கண்ணா! என்று வேணி வீணை மீட்ட—மொட்டைமாடி—வாழ்வு அடிக்கடி நெஞ்சிலே படமாகும். இளங்குமரிக்கு காதலனின் உறுதி மொழிகள்தானே எதிர்காலப் பாதையின் திறவு வழியாகிறது.

அந்த அன்பு மொழிகள் நாச இதயத்தின் பாச மொழிகள்தான் என்று உணர்த்தப்படுகிற போது உண்மையின் சுயரூபம் நடமாடுகிறது. தேவதாஸ் புன்னகை செய்த கெடுமதியாளன் — அவனது சபல இச்சைக்குத் தன் வாழ்வையே கெடுத்துக் கொண்ட அபலை வேணி. நாசமான நம்பிக்கையை எண்ணிப் பார்க்கும் போது நெஞ்சிலே வேல் பாய்ச்சியது 'நல்லது பேசிய கெட்டவனே நீயும் வாழ்கிறாய்' என்று சபித்தாள். புராண கால 'பத்தினி'களல்லவே இந்தக் கால வேணிகள்! எனவே சாபம் பலிக்காமலே போய்விட்டது. அகலியையும் துரோபதையும் சீதையுமாகாத 'பாவை'. அவளது சாபத்துக்குத்தான் மதிப்பேது?

அழுதாள்... அழுதுகொண்டேயிருந்தாள். அவளை அழவைத்தவன் யார் யாரையோ அழவைத்துக் கொண்டுதானிருந்தான். முதலிலே சிந்துபாடி சிரிக்க வைத்து முடிவிலே முனக வைத்த அந்த மோசக்காரன் சீரோடு சிறப்போடு வாழத்தான் செய்தான். ஊரறிய இல்லாவிட்டாலும் உள்ளமறியவாவது தனது வாழ்வு மணாளனாக ஏற்றுக் கொண்ட தேவதாசன் மீளமுடியாத துக்கக் குளத்திலே தன்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டானே யென்று தவித்தாள். பூங்கொடியை ஒடித்துப் புழுதிமேட்டிலே போட்டுவிட்டுத் தானும் போலீசாரும் தேடினாலும் பிடிபடாதஇடத்துக்குப் போய்விட்ட நாடோடியை எண்ணி காலமெல்லாம் திகைத்தாள்—தேம்பினாள். அந்த புலம்பலும், விம்மலும் எங்கோ அக்ரம யாத்திரை நடத்திக் கொண்டிருந்த தேவதாஸின் காதிலே ஒலிக்கவா போகிறது?

தம்பியைப் போல அக்காளுமிருக்க மாட்டாளென்று பூரணமாக நம்பியதற்குப் பின்னர்தான் நர்மதாவின் துணையை கடித மூலம் வேண்டுகோள் தந்து விரும்பினாள். அலைமோட்டமிடும் அமுதவல்லியின் நெஞ்சத்துக்கு ஆறுதல் வேண்டினாள் நர்மதாவிடமிருந்து. பச்சை மரத்தின் உச்சியிலே சிக்கிக் கொண்ட பட்டம் கதிகலங்கித் துடிக்கிறதே அதைப் போல ஒருவகைத் துடிப்பு அமுதத்துக்கு. அமுதமெனும் அழகான பட்டம்...தேவதாஸ் கயிற்றோடு கலக்கப்பட்டு காலக் குமரனால் பறக்கவிடப்பட்டது. இப்போது கயிறுக்கும்—பட்டத்துக்கும் யிருக்கும் உறவு அறுந்து போகும் நேரம். சிக்கலை எடுக்க நர்மதாவை வேண்டி வேண்டி அழைத்தாள்.

வேதனை இதயத்திலே...நோகாமல் நொந்து, சாகாமல் சாகும் நர்மதாவின் பிஞ்சு நெஞ்சிலே சம்மட்டியால் அடித்தது அமுதா மட்டுமல்லவே. அவளது வாழ்வுச் சங்கிலியை பலப்பலர் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். கண்ணால் பேசி கடிதத்தைத் தூதனுப்பி கோர்ட்வரை நிலைமை போகும் அளவுக்கு நர்ஸின் வாழ்வுப் போரிலே டாக்டரும் ஒரு அங்கமாக உருவெடுத்தார். கிரிதல் கனலாகியது அவளுக்கு.

தன் வாழ்வுக் கொடியை எங்கோ படரவிட எண்ணினார். அந்த எண்ணம் இடிந்து கொண்டிருந்தது. உலக வியாதியெல்லாம் தன் உள்ளத்திலே குடிபுகுந்து விட்டதுபோல டாக்டருக்கு வேதனை...? டாக்டர் குழம்பத்துக்கு ஆளாகி ஒய்வு எடுத்துக் கொண்டு குளிர் வீசும் குற்றாலத்துக்கு ஓடும் அளவுக்கு நிலைமை வளர்ந்தது தன்னால் தானே யென்று கசிந்துருகினாள்.

மொத்தத்திலே சுமைதாங்கிய இதயத்தோடுதான் எல்லோருமே நடமாடிக் கொண்டிருந்தார்கள். நர்மதாவிடமிருந்து கிளம்பிய புயல் யார் யாரையோ சம்மந்தப்படுத்திக் கொண்டு புதுப்புது புயலாகப் பரவிக் கொண்டேதானிருந்தது. வேதனைத்தீ வளர்ந்து கொண்டுதானிருந்தது. தீ...எப்படியோ பிடித்துக்கொண்டுதான் விடுகிறது. ஆனால் அது பரவுகிற போது அவசர அவசரமாக அணைத்து வைக்கப்படுகிறது. அது போலத்தான் வேதனையை விரட்டத் துடித்தாள் நர்மதா. இரவெல்லாம் தூங்காமல் விழித்துக் கொண்டே சிக்கலை எடுத்து விட மார்க்கம்தேடி ஓடிக்கொண்டிருந்தாள். காலை மலர்ந்ததும் முதல் ரயிலிலேயே சிதம்பரம் சென்று அமுதாவைக் காண வேண்டுமென்ற முடிவுக்கு வந்தாள். அவளது அந்த முடிவை ஆதரிப்பது போல அதிகாலைச் சங்கு ஆலையிலிருந்து முழங்கிக் கொண்டிருந்தது. (தொடரும்)

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேகவலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40—நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னுடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணி ஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூ,	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழுவின் முடிவுகள்

- **மார்ச் 20: ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்.**
- **நாடக சட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொதுச் செயலாளருக்கு அதிகாரம்**
- **தொழிலாளரிடையே பணிபுரிய கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்.**
- **ஜூன் திங்களில் 2-வது மாநில மாநாடு.**

அறிஞர் அண்ணா அவர்களைப் பொதுச்செயலாளராகக் கொண்டு பணியாற்றிவந்த தி. மு. கழகப் பொதுக்குழுவின் கடைசிக் கூட்டம் கோவையை அடுத்த பேரூரில் 20—2—55-ம் நாள் காலை 10-30 மணிக்கு துவங்கி மாலை 5-30 வரை நடைபெற்றது. உறுப்பினர்களைத் தவிர வேறு யாரையும் இக்கூட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. இப்பொதுக்குழு கூட்டத்திற்கு எல்லா மாவட்டங்களிலிருந்தும் 60-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வந்திருந்தனர். தவிர, குழுவிற்கு வரஇயலாது போனமைக்கு வருந்தியும், பொதுக்குழுவின் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் தந்தி மூலமும், கடிதம் மூலமும் 20 உறுப்பினர்கள் ஒப்புதல் தெரிவித்திருந்தனர். பொதுச்செயலாளர் அண்ணா தலைமை வகித்தார்கள்.

இப்பொதுக்குழு 14—12—1952-ம் நாள், தேர்தல்மூலம் அமைக்கப்பட்டது. இக்கூட்டமே இதனின் கடைசி கூட்டமாகும். அடுத்து ஏப்ரல் திங்கள் வாக்கில் கிளைக் கழகங்களிலிருந்து தேர்தல் மூலம் அமைக்கப்படுகிற மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் புதிய பொதுக்குழுதான் நடைபெறும். அப்பொதுக்குழுவின் முதற்கூட்டத்தில் பொதுச்செயலாளர் தேர்வும் நடைபெறும்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் பல பிரச்னைகளைப்பற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டபின், பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள், இதுவரை பொதுக்குழு கூட்டங்கள் வாயிலாகவும், கழக நடவடிக்கைகளிலும் தமக்கு உறுதுணையாயிருந்து பணியாற்றிவந்த பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், அவர்களைத் தேர்ந்தெடுத்த பொது உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

இதுவரை நடைபெற்ற பொதுக்குழு கூட்டங்களின் சிறப்புக்கு சிகரம் அமைத்தது போன்று எல்லா ஏற்பாடுகளையும் கோவை நகர தி. மு. கழகத்தினர் செய்திருந்தது பாராட்டத் தக்கதாகும். சுருங்கக் கூறவேண்டுமானால், ஒரு மாவட்ட மாநாடு நடைபெறுவதைப் போலவே யிருந்தது.

கோவை ரயில்வே நிலையத்துக்கு, பொதுக்குழு உறுப்பினர் எஸ். ஏ. ராச மாணிக்கமும், நகரச் செயலாளர் பழனிச்சாமியும் மற்ற நிர்வாகிகளும் வந்திருந்து பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்று உபசரித்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வித சீரும் சிறப்புடன் பொதுக்குழு இனிது நடந்தேறியது.

பொதுக்குழு கூட்டத்தையொட்டி கோவை நகர தி. மு. கழகத்தினர் நகரெங்கும் தோரணங்களாலும் வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரித்திருந்தனர்.

ஞாயிறன்று காலையில் பல பாகங்களிலிருந்து பொதுக் குழு உறுப்பினர்கள் கோவை வந்தடைந்தனர். காலை 8 மணியக்கு கோவை புகைவண்டி நிலயத்திலிருந்து பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்று ஓர் மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான பொதுமக்களும், ஏராளமான கழகத் தோழர்களும், கழகக் கொடிகளுடன் ஊர்வலத்தில் அணிவகுத்து நின்றனர், ஊர்வலம் நகரின் முக்கிய வீதகள் வழியாக, பேரூர் வந்தடைந்தது. அங்கு காலை 10 மணிக்கு பேரூர் வார்டு தி. மு கழகச் சார்பில் கொடியேற்று விழா நடைபெற்றது. பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆரவாரப் பேரொலி எழுப்ப வானளாவிய கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்கள், பின் பொதுக்குழு நிகழ்ச்சித் துவங்கியது,

பொதுக்குழு உறுப்பினர்களுக்கான எல்லா வசதிகளையும் உணவு, மற்றும் போக்குவரத்து போன்றவை உள்ளிட்ட எல்லாவற்றையும் வெகு சிறப்பாக கோவை தி. மு. கழகத் தோழர்கள் செய்திருந்தனர்.

பொதுக்குழு உறுப்பினர் சே. அ இராச மாணிக்கம், நகரச் செயலாளர் பழனிச்சாமி, சி. டி. தண்டபாணி, அரசு, கிருஷ்ணமூர்த்தி, சி. எஸ். ஆர். மாணிக்கம், வணங்காமுடி, சேரலாதன், புகழேந்தி, அப்பாவு, ஜானகிராம் மற்றும் கழக செயற்குழு உறுப்பினர்கள் பெரும் பொறுப்பேற்று ஏற்பாடுகளை திறம்படச் செய்தனர்.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் கடந்த பொதுக் குழுவிற்கும், இந்தப் பொதுக்குழுவிற்கும் இடையில் உள்ள காலத்திய கழகத்தின் நடவடிக்கைகளையும், நாட்டின் நிலையையும் நமது எதிர்கால பணியினையும் குறிப்பிட்டு விரிவாகப் பேசினார்கள்.

பிறகு நாடகத் தடைச் சட்டம் குறித்து விவாதம் நடைபெற்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதும் இடைவேளை உணவுக்காக 2 மணிக்கு குழு கலைந்தது.

மீண்டும் மாலை 3½ மணிக்குக் கூடி பலபிரச்னைகளை குறித்தும் விவாதித்து கீழ்க்கண்ட முடிவுகளை மேற்கொண்டது,

கண்துடைப்பு

அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'சோஷலிசம் மாதிரி' ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்குவது என்ற தீர்மானமானது, ஏழை—நடுத்தர மக்களிடையே உருவாகி வளர்ந்துவரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச் செய்ய நடத்தப்படும் ஓர் கண்துடைப்பும், ஏமாற்றுத்தனமும் ஆகும் என்பதை இப்பொதுக்குழு, மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

—கே. ஏ. மதியழகன், என். எஸ். இளங்கோ

கண்டன நாள்

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால், ஏற்கனவே வளம் குவிந்துள்ள வடநாட்டில், மேலும் மேலும் புதிய தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் ஆயைவைகளை அமைத்துக் கொண்டு. தொழில்துறை வழிவகையில் மிகவும் பின்தங்கியுள்ள தென்னாட்டில், தொழில் வளர்ச்சியின் அடிப்படை சாதனங்களான நிலக்கரி, இரும்பு மின்சார உற்பத்தி ஆகியவைகளில் உதாசீனப்படுத்தி வரும் இந்திய சர்க்காரின் போக்கினை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஏற்கனவே தென்னாட்டில் இடம் பெற்றுள்ள பெங்களூர் பால் பண்ணை ஆராய்ச்சி நிலயம், குன்னூர் உணவு ஆராய்ச்சி நிலயம் ஆகியவைகளைக்கூட இங்கிருந்து மாற்றுவதென்று டில்லி சர்க்கார் செய்துள்ள முடிவை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் வற்புறுத்தி வரும் வேண்டுகோளை உதாசீனப்படுத்தி வரும் இந்திய சர்க்காரின் இப்போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக 20—3—55-ம் நாளன்று "ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்" நடத்துமாறு தி. மு. கழகக் கிளைகளை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

—ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன்

நாடகத் தடைச் சட்டம்

பொதுவாக முற்போக்குக் கருத்துக்கள் பரவுவதைத் தடுத்துவிட வேண்டுமென்றும், குறிப்பாக திராவிட இயக்கம் பரப்பிச் செல்வாக்கு உண்டாக்கும் கருத்துக்களைத் தடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் சென்னை சர்க்கார் நிறைவேற்றியிருக்கும் நாடகத் தடைச் சட்டத்தை ரத்து செய்யும்படி வலியுறுத்துகிறது.

தி.மு. கழகத் தோழர்கள் எப்போதும்போலும் மேலும் தீவிரமாகமாகவும், பண்புடனும் திராவிட இயக்கக் கருத்துக்களைப் பரப்பும் நாடகங்களை நடத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கமளிக்க வேண்டுவதுடன் இத்தகைய நாடகப் பணியாற்றுவதற்காகவே தனிக்குழு நியமிக்க வேண்டுமென்று, பொதுக்குழு, பொதுச்செயலாளரைக் கேட்டுக்கொள்கிறது.

சட்டத்தின் துணைகொண்டு சர்க்கார் தி. மு. கழகத்தினர் நடத்தும் நாடகங்களை தடுக்க முன்வந்தால் சட்டப்படியும், கிளர்ச்சிமூலமாகவும் எதிர்ப்பு முறையிலும் நடைவடிக்கை எடுக்க பொதுச் செயலாளருக்கு பொதுக்குழு அதிகாரமளிக்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்; அ. பொன்னம்பலனர்

மாநில மாநாடு

தி. மு. க. மாநில மாநாட்டை ஜூன் திங்கள் (இறுதி கிழமையில்) திருச்சியில் நடத்துவதென்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

மாநில மாநாடு ஜூன் திங்களில் நடத்தப்படுவதற்குள், ஏற்கனவே உள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தி, மாவட்டக் கழகம் அமைத்து அதிலிருந்து முறைப்படி பொதுக்குழு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று இப்பொதுக்குழு கருதித் தீர்மானிக்கிறது. புதிய பொதுக்குழு கூடி, மாநாட்டுக்குத் தலைவராகப் பொதுச்செயலாளரை தேர்ந்தெடுத்துக் கொள்வதென்றும், இதனை ஏப்ரல் இறுதியில் முடித்து விடுவதென்றும் இந்த பொதுக்குழு தீர்மானிக்கிறது.

மாநில மாநாட்டுக்கு, துவக்கச் செலவுக்காக குறைந்தது 25 ஆயிரம் ரூபாய் நிதி தேவைப்படுவதால் இந்தத் தொகையைத் திரட்ட இரண்டு முறை

11-ம் பக்கம்

மகிழ்ச்சிக்குரிய செய்தி.

திராவிடன் இதழில்

மேலும் புதிய அம்சங்கள்

மார்ச் திங்கள் 2-வது வாரத்திலிருந்து தற்போதுள்ள அளவிலேயே 16-பக்கங்களாக சில புதிய பகுதிகளுடன் வரும்.

விலை 3 அணா தான்.

விற்பனையாளரில்லாத ஊர்களுக்கு மட்டும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் உடனே தேவை.

திராவிடன் அலுவலகம்

16, நிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1

[illegible], [illegible], வெளியிடுபவர் என். வ. நடராசன், [illegible] 16, [illegible] தெரு, சென்னை